போன் நெ. 15. விலை 2 அணு. REGD No. 4642

# திராவிடநாடு

மலர் 13 9—1—55 இதழ் 28

## குரங்கும்! கொடியும்!!

மகாத்மாக்களாகிட, யாராரோ, அன்னென்னவோ செய்கின்றனர். மந்திர ஜாலம் தெரியும் இவருக்கு-மகா ஞானி இவர்—பிறந்தது முதல் சாகும் வரையில் சங்கர நாமத்தைவிடாதபடி ஜபித்தார்—ஆழிமழைக் கண்ணனை அனவரதமும் பாடியவர் — சூடிக் கொடுத்த சுடர்க்கொடியின் அம்சம் இந்த அம்மை—தெரு வீதி ஒன்று விடாது கோவிந்தன் நாமத்தைக் கூவிக் கூவிப் புரண்டவர், இவர்—வைர முடியும் தங்க ஓடும் போட, பண உதவி செய்திருக்கிருர் அவர் — பக்தர்களைச் சேவித்தவர் — பரமனடி நினைத்துக் கிடப்பவர்—இப்படியெல்லாம், மக்கள் மன்றத்தில் பேசப்படும், ஆண்டவனின் அடியார்களின் பட்டியல் உண்டு. அதேபோல, ஒரு சிட்டிகை விபூதி கொடுத்தால், தீராத குன்மத்தையும் தீர்க்கும் மகான் — ஒற்றைக் காலாலேயே திருப்பதி மலையேறி தேவ தேவனைத் தரிசித்தாராம், இந்த ஞானி—மலைக் குகையிலே மறைந்து தவம் செய்த யோகி இவர், இப்படியெல்லாம் கதைகள் கூறக் கேட்டிருக்கிருேம் — ஆத்ம ஞானிகளின் அடியார்களிடமிருந்து. அவ்வள்வு சிரமம் எதையும் அனுபவிக்கவில்லை! அம்மையையும் அப்பனையும் நெக்குருகப் பாடவில்லை! பாசுரம் கேட்டதில்லை — வாயுருக உரைத்ததில்லை. வரங்களும் அளித்ததில்லை. நோய் போக்கவில்லை — ஆச்சாரியாரைப் போல அனுதினமும் ஆண்டவனுக்காகக் கூட்டமும் போடவில்லை. இருவர் — தவறு! தவறு!! அவைகளை மனித இனத்தில் சேர்த்துச் சொன்னல் கூட, ஏசுவர், பக்தர்கள் — இரண்டு வாயில்லாத ஜீவன்கள்–திருவிளையாடல்கள் எதையும் அறியாத ஜீவன்கள் — நாமம் போட்டறியா! நாதனைச் சேவித்து அறியா! வடகலைச் சண்டை தெரியாது! தென் கலையின் உயர்வு புரியாது! கோயிலுக்கு அர்ச்சனை செய்ததில்லை! குளித்து முழுகிப் பக்தி செலுத்த கோயில் குளம் சென்றதும் கிடையாது! — அப்படிப் பட்ட இரண்டு ஜீவன்கள், வெகு எளிதில், மகாத்மாக்களாகி விட்டன.

ஒன்று குரங்கு!

இன்னென்று கொடி!!

திகைக்காதீர்கள் — குரங்குதான், கோபுரம் நாடிகளால், மகாத்மாவாக்கப்பட்டிருக்கிறது! அதுவும், அன்பர் ஆச்சாரியார், மனத்தை வர்ணிக்க, அடைமொழியாக உயோகித்தாரே, மனமெனும் மாயக்குரங்கென்று! அந்த குரங்கினத்தைச் சேர்ந்த ஒரு குரங்குதான், மகாத்மாவாகியிருக்கிறது!! மக்களால், போற்றித் துதிக்கப்பட்டு, மகாபாராயணம் யாவும் செய்யப்பட்டு, ஒரு மகானைவிட மேலான சிறப்புகளுடன், கொண்டு செல்லப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

சம்பவம் நடந்த இடம் குண்டூர்! தேதி டிச-28.

மூன்று குரங்குகள், ஒரு வீட்டுக்கு முன், இருந்தனவாம். அவைகளின் சேட்டை பொறுக்காத ஒருவர், சுட்டுக் கொன்று விட்டாராம். "ஹநுமாரின் அம்சமான குரங்கைச் சுட்டதைக் கண்டு கொதிப்படைந்த மக்கள் சுட்டவரைச் சபித்தனர்" — என்று 'தினமணி' தெரிவிக்கிறது. சபித்ததோடு இருப்பார்களா! போலீசாருக்குச் சொல்லி, அவர்மீது, இ. பி. கோ. 336 பிரிவின்படி வழக்கும் தொடரச் செய்து விட்டனர். அதன் பிறகு இறந்த குரங்குக்கு மாலைசூட்டி, தீபாராதனை செய்து, அனுமார் கோயிலுக்குக் கொண்டு சென்று அடக்கம் செய்தார்களாம்! தூக்கிக் கொண்டு சென்ற போது, பக்தர்கள், சும்மாவா செல்வார்கள்? அதுவும் ஆஞ்சநேய பக்தர்களாச்சே!! பஜனை—வேதபாராயணம் —'ராமராமஹரே!' எனும் முழக்கம்—ஆங்காங்கு சூடதீபம்—ஒரே, அமர்க்களமாயிருந்திருக்கிறது, குண்டூர்.

அமெரிக்காவில் அணுகுண்டு பரீட்சைகளைச் செய்து பார்க்க, இந்தியாவிலிருந்து ஏராளமான குரங்குகளைக் கொண்டு செல்லுகிருர்களாம்—குரங்கைப்பற்றி, அமெரிக்கன், அப்படி நினைக்கிருன்! ஆனுல், நம்மவர், 'அவதாரம்' ஆக்கி, இவ்வளவு ஆடம்பரமும் செய்திருக்கின்றனர்.

செத்தது, ஒரு குரங்கு! சுட்டவன் அன்று முழுதும் வெளியிலேயே தலை காட்டவில்லையாம்! சர்க்காரும், வழக்குப் போட்டிருக்கிறது. இறந்த குரங்கும், மகாத்மீயப் பொருளாகிவிட்டது- விரைவில், பெரியதோர் ஆலயம் அமைக்கப் பொருள்திரட்டப்படினும் ஆச்சரியமில்லை. அந்தளவுக்குப் பெரியதோர், 'மூர்த்தியை' உண்டாக்கியிருக்கின்றனர், பக்தர்கள். இது, ஆந்திராவில்.

*

மகான்களைச் சிருஷ்டிப்பதில், தெலுங்கரைவிட, தமிழர்கள் என்ன மட்டமா? இல்லை, பாருங்கள்! அவர்களையும் மிஞ்சிவிட்டார், திருச்சி பக்தர் ஒருவர். குண்டூர்க்காரர்கள், குரங்கை, மகாத்மீயப் பொருளாக்கினர்! இவரோ, ஒரு பூசணிக் கொடியையே 'அவதாரப் பொருள்' ஆக்கியிருக்கிறார்! திருச்சியிலுள்ள ஒரு மோட்டார் கம்பெனியின் சுவரில் 'பாம்புபோல்' ஒரு பூசணிக்கொடி படர்ந்திருக்கிறதாம்! நீளம் 7 அடியாம்! அதனால், அது 'அவதாரமாம்.' பூசணி, மரமாக இருந்து அது கொடி போலப் படர்ந்திருக்கிறதென்று சொன்னாலும், கேட்போருக்கு மயக்கம் அளிக்கக்கூடும். பூசணி மரமல்ல! கொடிதான்!! அது பாம்புபோல இருப்பது—அதிசயமாம்; அதனால், அது ஒரு அவதாரப் பொருளாம். அவதாரம் என்றால் புராணம் ஒன்றும் இருக்கவேண்டுமல்லவா? அந்தப் புராணம், இது: 'தினமணி' பதிப்பு — "சில திங்களுக்குமுன்பு அங்கு ஒரு நல்ல பாம்பு அடித்துக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதாம். அதை அடித்தவர், அப்பாவத்திலிருந்து தப்புவதற்காக, அங்கு பாம்பு உருவம் கொண்ட ஒருகல் நட்டு பூஜை போட்டதாயும், பிறகு புதிதாக ஒரு கல் அமைப்பதற்காக அந்தக் கல் தூக்கி எறியப்பட்டுவிட்டதாகவும், அதனால் கோபம் கொண்ட நாகராஜன் (தினமணியார் வார்த்தை!) அந்தக் கல்லுக்கு நிழல்தர பூசணிக் கொடி ரூபத்தில் அங்கு படர்ந்திருப்பதாகவும் சிலர் பேசிக் கொள்ளுகின்றனர். ஏராளமான ஜனங்கள், இதை வந்து பார்த்துப் போவதாயும், அக்கொடிக்குத் தவறாமல் தண்ணீர் கொட்டி வருவதாகவும், அங்கு ஒரு கோயில் கட்டவும் உத்தேசிக்கப்பட்டிருப்பதாயும் அந்த மோட்டார் கம்பெனியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறியதாக பி. டி. ஐ. நிருபர் தெரிவிக்கிறார்!! தெரிவிக்கிறாராம், பி. டி. ஐ. நிருபர்! அவருக்கு எவ்வளவு அக்கரை பார்த்தீர்களா — இந்தச் செய்தியை அகில உலகுக்கும் தர!! எத்தனையோ செய்திகள்-நமது மாநாடுகள்-இவைகளைப் பற்றி, ஒரு வரிகூட செய்தி அனுப்பமாட்டார், அவர். ஏனெனில் அகில முழுமைக்கும் செய்தி பரப்பும் ஸ்தாபனமல்லவா—அதனால்! ஆனால், இந்த 'அவதாரம்' பற்றி மட்டும்... என்ன அக்கரை! என்ன அக்கரை!!

*

"ஆண்டவனுக்குச் செய்யும் திருச் சேவை..."

"ஆஸ்திக மகாத்மீயத்தை விளக்கும் அதிசயங்கள்!"

என்ற எண்ணத்துடன், குரங்குக்குக் கோயில் கட்டவும், கொடியினை அவதாரமாக்கவும் எண்ணுகிறார்கள், ஆஸ்திகர்கள். அதன் பலன்தான், இப்படிப்பட்ட செய்திகள். இவைகளைப் போடவும் பத்திரிகைகள். இவ்வண்ணம், மகாத்மீயத்தை விளக்கி, மகேசனின் செயலைப் பரப்ப—இன்று மட்டுமல்ல—அன்றிலிருந்தே, ஏராளமான 'காட்சிகள்', புராணீகர்களால் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தும், என்ன நடந்தது. ஆஸ்திகர்கள், இவ்வண்ணம், அலறுகிற அளவுக்கு வரத்தான் நேர்த்திருக்கிறது!! மிருகத்தையும், கொடியையும் மகாத்மீயப் பொருளாக்குகின்றனரே- அவர்களோடு, நீங்களும், வாருங்கள்- சில காட்சிகளைக் கண்டு வருவோம்.

*

ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்கின்றது, ஒரு நாரை!

ஊரிலிருக்கிற குளம் குட்டைகளிலெல்லாம், நீர்வற்றி, உணவுக்கான மீன் ஒன்று கூட இல்லாமல் ஒழிந்தது.

பறந்தது, வேற்றூர் நாடி! கெளுத்தியும், கெண்டையும், வராலும், இருலும், தாவிக்குதிக்கும் வாவியொன்றை அடைந்தது. குளத்திலோ மீன் கும்பல்! கரையிலோ, நாரை!! எனினும், அது தீண்டவில்லை மீன்களை.

ஏன்?—அவ்வளவு விரைவில் அதற்குப் பதிலளித்து விடுவாரா, பக்தர்!

வர்ணிக்கிறார், கேளுங்கள் "அந்தத் தீர்த்தத்திலே ரிஷிகள் சிலர், ஸ்நானம் செய்துகொண்டிருந்தனர்—ரிஷிகள் என்றால் சாமான்யமானவர்களா? ஆண்டவனே திருஉருவெடுத்துவந்ததைப் போன்ற உருவுடைய ரிஷிகள்! —அவர்கள் மூழ்கி, மூழ்கி எழுந்தோறும், அவர்களுடைய தோட்புறத்திலே, சாய்ந்த சடையிலே தத்துகின்ற மீன்கள் பாய்ந்து, பாய்ந்து புரளுதலைப் பார்த்தது. இம் மீன்கள் இவ்விருடிகளுடைய திருமேனியைத் தீண்ட எத்தவம் செய்தனவோ! இம் மீன்களை நாம் புசிக்கலாகாது...அரகர நமப் பார்வதி பதயே"—

நாரைக்குப் பிறந்தது, நல்லறிவு! ரிஷிகள்மீது பட்ட, மீன்களையுண்ணலாமா? செச்சே! எவ்வளவு பாபம்!!

அதற்குமேல், அவர்கள், ஸ்நானம் முடிந்து, ஆண்டவனின் திருநாமத்தை உச்சரித்ததையும் கேட்க, ஆனந்த பரவசமாகி, ஐயன் உமையொருபாகன் இருக்குமிடமான மதுரைக்குப் பறந்தது. அங்கே, பொற்றாமரைக் குளத்தைக் கண்டதும் — நா, ஊறவே, இறங்கி, மீன்களை உண்ணப்போகின்ற வேளையில், 'ஆகா! என்ன காரியம் செய்ய இருந்தோம்?', என்று மூளையில் படவே, மீனாட்சி சுந்தரேசனைத் துதிக்க, என்னப்பன் ரிடபவாகனரூடராய் வந்து வரங் கொடுத்து அருளினார். நாரை, சிவசாரூப்பியம் பெற்று, விமான மேற்கொண்டு, பஞ்சதுந்துபிகளொலிப்பத் தேவர்கள் பூமாரிபொழியச் சிவலோகத்தை அடைந்து, நந்திகணத்துள் இருந்தது!!

*

நாரை, சிவபதம் சேர்ந்ததைவிளக்கி, அப்பேறபட்ட நாரைக்கே சிவலோகம் தந்த அய்யன், மானிடப்பதர்களாகிய நமக்கா அருளமாட்டார்! ஆதலால், வருக! வருக!! இறைவனடி தொழ வருக!!! என்று, பக்திபிரவாகத்தோடு,

## இலங்கை 'கட்டபொம்மன்!'

தமிழகத்திலே முதல் முதலில் வெள்ளையன் ஆதிக்கத்தை எதிர்த்து இனி 'துஞ்சிடார்' என்று பொங்கியெழுந்தான் ஒரு மாவீரன். 'சதையைத் துண்டு துண்டாக்கினும் உன் எண்ணம் சாயுமோ—ஜீவன் ஓயுமோ என்று கர்ஜித்தான் அவன். துரோகிகள் காட்டிக்கொடுத்தனர். அந்தப் புறநானூற்றின் வீரஉருவம் தூக்கு மரத்தில் தொங்கவிடப்பட்டது. அந்த மாவீரன்தான் மக்கள் மாணிக்கம் கட்டபொம்மன். அவனின் தினம் சமீபத்தில் தமிழகத்திலே கொண்டாடப்பட்டது.

அதேபோல ஈழத்து கட்டபொம்மன் கெப்பிட்டி பொலேக்கு இலங்கை மக்கள் தலைதாழ்த்தினர். கொழும்பிலே அவன் மண்டையோடு வணக்கத்திற்காக வைக்கப்பட்டது. ஆயிரமாயிரமான மக்கள் தரிசித்து தம் வணக்கத்தை செலுத்தினர், அண்மையில்.

கெப்பிட்டிப் பொலே இலங்கையின் இதிகாசத்திலேயே கொலுவேறியுள்ள கர்மபுருஷன். முதல் முதலாக வெள்ளையனை எதிர்த்துக் கிளம்பிய வீர ஏறு. 1817–18-ம் ஆண்டு இந்த நாட்டிலே நடந்த விடுதலைப் போராட்டங்களுக்கு தலைமை வகித்தான். கிளர்ச்சியை அடக்குவதற்காக வெள்ளையரால் அனுப்பப்பட்ட 'திசாவை'யான அவன் தன் படையை திருப்பி அனுப்பினான். புரட்சிக்காரர் பக்கம் சேர்ந்தான். இலங்கை விடுதலைப் போராட்டத்தின் பொங்கெரி மூண்டது.

பேசுகிறார்—சிவபக்தர். நாரைமட்டுமா? இதோ, பாருங்கள்!

இன்னொரு சிவபக்தரை!!

*

ஒரு கரிக் குருவி!

பட்சி இனத்திலேயே மிகவும், அருவருக்கத்தக்க, குருவி.

வெட்கப்படுகிறது, வாழ!

ஏனெனில், மயிலையும், குயிலையும், படைத்த ஈசன் தன்னையும் படைத்தானே, என்கிற வெட்கம்!! அதனால், ஒரு பெரிய காடு சென்று, தனியாக மரப்பொந்து தேடி, மறைந்து கிடக்கிறது.

அவ்வழியே, வந்தார், ஒரு ஜடாமுடி! அந்த மரத்தடிக்கு வந்ததும், சோமசுந்தர மூர்த்தியின் திருவருளைப்பற்றி, கூடவந்தவர்களிடம் உரையாடினார்.

கேட்டது, கரிக்குருவி!

ஞானப்பால் அருந்திய ஆனந்தம் வந்தது, அதற்கு!

ஓடிற்று, ஆலவாய்க்கு!!

அப்பனைத் துதித்தது.

அடைந்தது, முக்தி.

*

நாரை! கரிக்குருவி!! — இரண்டும் பட்சி ஜாதிகள்.

பரமன், இவைகளுக்கு மட்டும் தானே, அருளளித்தார்! — என்று கேட்கக்கூடுமல்லவா, சிலர். அந்தச் சந்தேகம், சிவப்பெருமை விளக்கிக்கு!

"இவைகளுக்கு மட்டும்தான்—என்னப்பன் அருள் கிடைத்தது என்றெண்ணாதீர். மிருக ஜாதியிலேயே, கேடுகெட்ட ஜன்மமல்லவா, பன்றி! அந்தப் பன்றிக்கு ஐயன் வழங்கிய அருளைப் பாருங்கள்!"

*

பாண்டியன் இராசராசனைப் பன்றிக் கூட்டம் எதிர்த்தது! ஆம், உண்மையான பன்றிகள்தாம்!!

தமது காட்டுக்கு மன்னன் வேட்டையாட வருவதா? — என்றெண்ணி, மன்னனுடன் பன்றிகளின் ராஜா, படைதொடுத்தார்!

விளைவு, எல்லாம், சிறிது நேரத்தில்—செத்தன.

பன்றிராஜாவின் பன்னிரண்டு குட்டிகள் மட்டும் மிஞ்சின!

இந்தக் குட்டிகள் யார் தெரியுமா? முனிவர் ஒருவரின் தவத்தைக் கலைத்தமையால், சபிக்கப்பட்ட வேளாளப் பிள்ளைகள்!

அவைகள், அப்பா, அம்மா இறந்த துக்கத்தால் அழ, அக்குரல் கேட்ட மதுரை மீனாட்சி, நாதனைப்பார்க்க, நாதன் பன்றியாகிச் சென்று பால் கொடுத்து பசிபோக்கினார்! அப்படியும் அம்மையின் ஆசை தீரவில்லை! அதனால், சோமசுந்தரேசரைப் பார்த்து, "இந்த உதவி போதாது, நாதா! அவைகள்பால், உங்கள் அருள் பூரணமாகக் கிடைக்கவேண்டும்," என்று கேட்க, ஐயனும், இசைந்து அன்றிரவே, இராசராசப் பாண்டியன் கனவில் தோன்றினார்! விளைவு, மறுநாளே பாண்டியன், கானகம் சென்று பன்னிரண்டு பன்றிகளையும் அரண்மனைக்கு அழைத்துவந்தான். ஐயன் கட்டளைப்படி, அவைகளுக்கு, அமைச்சர் பதவிகளைக் கொடுத்தான்! பன்றிகள், அமைச்சர்களாயின!!

அதுமட்டுமா?

பழைய மந்திரிகளுடைய பெண்களையும் பிடித்து, அப்பன்றிகளுக்குத் திருமணம் செய்வித்தான்.

என்னே, ஈசன் அருள்!

என்னே, அவன் செயல்!!

*

நாரை! கரிக்குருவி! பன்றிக்குட்டிகள்!—இவைகளையெல்லாம், சைவப் பிழம்பாக்கி, பக்தர்கள் அழைக்கின்றனர், மக்களை! ஈசனின் திருவிளையாடல் இவை—அப்பேற்பட்ட ஈசனைத் துதித்தால், நாரையையும் கரிக்குருவியையும் தனதடி சேர்த்துக்கொண்ட, எம்பிரான், ஆறறிவுள்ள மனித ஜீவனுக்கு மறுமைச் சுகம் அளிக்கவா, மறுப்பார்? மறுக்கார்! மண்ணுலகத்தோரே, வம்மின்! வம்மின்!!—என்று வருந்தி அழைப்பதோடு, "மறுமையில் மட்டும் சுகம் கிடைத்தது என்று எண்ணாதீர்கள், இம்மையிலும் உண்டு. ஈசன், பன்றிகளை, மந்திரியாக்கியதைக் கேட்டீர்களன்றோ"—என்று பக்திப் பிரவாகத்துடன், வர்ணிக்கின்றனர்! திருவிளையாடற் புராணம் சிந்தும் தேனன்றோ இவை!!—என்று, சிந்தை குளிர, ஓதுகின்றனர்.

புள்ளினம், மிருக ஜாதி இவைகளோடு, ஆண்டவன் அருள் நின்றதென நினைத்துவிடாதீர்கள். ஐயன், அப்படிப்பட்டவரல்ல! 'அரகரா', எனும் ஒரு சொல் கேட்டாலே போதும்—முக்தி தருபவர். ஐயன் முக்தி தருவது, பிறகல்லவா? இங்கே வாழ என்ன தருவார், என்றெண்ணுகிறீர்

# சரித்திரம் இல்லாமையே...!

மேனாடுகள் இன்று சகலதுறைகளிலும் முன்னேறியுள்ளன வென்பது உண்மையே. எனினும் அவற்றின் தொன்மை தமிழகத்தின் முன்னே போட்டியிட முடியாதது. வாணிப இலக்கியத்திற்கு இங்கிலாந்தும், அறிவு இலக்கியத்திற்கு ஜெர்மனியும் நாகரீக இலக்கியத்திற்கு பிரான்சும், புதுமை இலக்கியத்திற்கு சோவியத் ருஷ்யாவும் உறைவிடமாகத் திகழ்கின்றன. ஆனால் கிறிஸ்து பிறப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலக்கியம் சமைத்து—நல்வாழ்வு வாழ்ந்த இனம் தமிழினம்.

எகிப்து கிரேக், ரோம், சாவகம், தென் அமெரிக்கா, நியுஸிலாந்து பாபிலோன், அக்காடியாபோன்ற உலகின் பல கோணங்களிலுமுள்ள நாடுகளில் அவ்வப்போது ஆராய்ச்சிகள் செய்கையில் கண்டெடுக்கப்படும் சின்னங்கள் தமிழ் மக்களின் வரலாற்றை வையகத்திற்கு உணர்த்த பெரிதும் துணைபுரிகின்றன.

தமிழ்மக்களிடம் சிறந்த இலக்கியச் செல்வங்கள் இருந்தும் தரணி தமிழ் மக்களுக்கு உரிய மதிப்பளிக்கத் தவறிய காரணம் சரித்திரக் குறிப்புகளின்மையே ஆகும்.

மண்ணுள்ளும்—நீருள்ளும் மறைந்துபோன நாகரீகத்தின் சின்னங்கள் நாளடைவில் கிட்டும்போது தமிழ்மக்களின் கீர்த்தியும்—பழமையும் புலப்படுகிறது.

அயலவர்களின் அலட்சியத்திற்கும், சொந்த இனத்தவரின் கோழைத்தனத்திற்கும் தமிழ் மக்கள் ஆளாகி கேவலமாக இருபதாம் நூற்றாண்டுவரை மதிப்பிழந்து கிடந்ததற்குக் காரணம் வரலாற்றுக் குறிப்பு அதாவது சரித்திரம் இல்லாமையே ஆகும்.

களா! இதோ, பாருங்கள், அதற்கும் ஒரு 'காட்சி' தருகிறோம்.

*

பேரரசன் வ ர கு ண பாண்டியன்! அவன் பேரரசன் என்பதால் அல்ல பெருமை; பெரிய சிவ பக்தன்.

ஒருசமயம், அவன் காதுகளில் நரிகள் போடும் கூ ச் ச ல், கேட்கிறது; காட்டு 'நரிகள்'தான். அக் கூச்சல் சாதாரணமான உங்களுக்கும் நமக்கும், ஊளையாகத் தோன்றும்! அவன்- சிவபக்தனுச்சே!! அந்த ஊளையிலும், ஓங்கார நாதனை எண்ணி அவைகள், ஓலமிடுவதாகக் கருதினன். உடனே, தனது மந்திரிப் பிரதானிகளை அழைத்தான். ''பிரதானியரே! பெம்மானை நரிகள், ஜபம் செய்து கொண்டிருக்கின்றன. அதுவும், இந்த நள்ளிரவில், காட்டில்—ஜபம் செய்து கொண்டுள்ளன. அரண்மனையிலே யிருக்கும் நமக்கே, எவ்வளவு குளிரடிக்கிறது! ஈசனை பஜிக்கும் அந்த பக்தர்களுக்கு எவ்வளவு குளிரும்!!-அதை எண்ணும் போது, என் மனம் ப த று கி ற து. ஈசுவர பக்தர்களைப் போஷிப்பதன்றோ, எனது கடமை. புறப்படுங்கள் காட்டுக்கு! அ ந் த நரிகளுக்கெல்லாம் ஆடை கொடுத்து போர்த்துவிட்டு வாருங்கள்!'' எப்படி, அரசன், உத்தரவு?

ஏதோ, சொல்ல நினைக்கிறீர்கள்!- பதருதீர்கள், அதே அரசனைப்பற்றி, இன்னுமொரு சம்பவம்.

நரிகளின் ஊளையைமட்டுமே.'தபம்' என எண்ணினன் என்று கருதாதீர்கள். ஒரு சமயம், நீர் நி லை க ளி ல் உள்ள தவளைகள் யாவும் ச ப் த ம் போட்டுக்கொண்டிருந்தன. அந்தச் சப்தம், உ ங் க ளு க் கு ம் நமக்கும், காதைக் குடையும்! அ வ ன், பக்தனுச்சே!! 'அரகரா'—என்று கூறி, அத் தவளைகள், தவம் செய்வது போலத் தோன்றிற்றும். அழைத்தான் மந்திரி பிரதானியர்களை! திறவுங்கள் பொக்கிஷத்தை—என்றுன். கொட்டுங்கள், கு ள ங் க ளி ல் என்றுன். ஏன்? தவளைப் பக்தர்களுக்கு காணிக்கை செ லு த் து வ த ல் ல வா, உண்மை அரனடியானின் கடமை! அதனுல்!! அதுமட்டுமா? ஒரு திருடனைப் பிடித்து வந்தனர், காவலர்கள். அத்திருடன் உடலில், ஏதோ, கொஞ்சம் சாம்பல் இருந்தது. 'அபச்சாரம்! அபச்சாரம்! சிவபக்தரே எனத்திருடனின் அடியில் வீழ்ந்து, அவனை விடுவித்திருக்கிறுன்!

*

இப்படிப்பட்ட 'அரசர்'களாக இருக்கக் கூடாதா, தம்பிரான்களும், தாடியுடைச்சாமிகளும் என்று நீ ங் க ள் எண்ணுவது தெரிகிறது! என்ன செய்வது? ஆலவாயப்பன், அ ப் போ து, கரிக்குருவி, நாரை, பன்றி — இவைகளுக்குக் கூட 'வெகு இலேசாக' தரிசனம் அளித்திருக்கிறுர்! சா யு ச் ய ப த வி யு ம் வழங்கியிருக்கிறுர். இப்போது, அரனடியாரும், ஆ த் தீ க வாதம் புரிவோரும், ஆச்சாரியபரம் பரையினரும்; அடடா!...ஒருநாளைக்கு எத்தனை தடவை அழைக்கின்றனர்? எங்கே, கிடைக்கிறது, முக்தி! கிடைத்திருந்தால், இந்தியாவின் ஜனத் தொகை, இவ்வளவு இருக்குமா! என்னமோ, போங்கள்—குன்டுராரையும், திருச்சிக்காரரையும் போல், ஏதோ, ஆசைக்கு, குரங்கையும் கொடியையும் 'அவதாரம்' எடுக்கச் செய்கிருர்கள். ஆனுல், அவர்கள் மனுச்சாட்சியையே, கேட்டுப்பாருங்கள்! குரங்குக்குகோயில் கட்டப்போகிறவரின் உள் எண்ணத்தையும், கொடிக்கு பூஜை நடத்துபவரின் உள்மனதையும் அறியும் திறமையிருந்தால், அவர்கள் மனது அடித்துக் கொள்ளும் வேகம் நமக்குத் தெரியும். மோட்டார் கம்பெனிக்காரர்,விளம்பரத்துக்காக அப்படிச் செய்தாரோ?— யார்கண்டார்கள்! எந்த பக்தன்'நல்ல சான்சு', என்று குரங்குக்கு ச மா தி எழுப்ப முயல்கின்றுரோ, யாருக்குத் தெரியும். சர்வம், 'பொருள்' ம ய ம் தானே—இப்பொல்லாத பூமியில்.

இப்படியெல்லாம், மகாத்மீயங்களைச் சிருஷ்டித்து, ஆண்டவனின் பெருமைக்கு பாலம் அமைக்க விரும்புகிருர்களே—அவர்களுக்கு அல்ல — உங்கட்கு சொல்லி வைக்கிறேன். பக்தர்களின் வகைகளையும், ஆண்டவனின் அருளால் புள்ளினமும், மிருக ஜாதியும், அடைந்த ''சாயுச்ய'' பதவிகளைப் பற்றியெல்லாம், அறிந்து கொண்டீர்களல்லவா? உங்களுக்கு இன்னெரு காட்சியையும் சொல்லுகிறேன்!

*

எதிரிகளின் படைகள் எக்காளம் எழுப்புகின்றன!

கொட்டு முரசு! வெட்டு தலைகளை !! —எனும் வீரமுழக்கம்.

குதிரைகளின் குளம்படிச் சப்தம், தஞ்சை அரண்மனையையே அலறடிக்கின்றது.

தஞ்சை ராயரோ, உச்சி மாடத்திலிருந்து பார்க்கிருர்.

தூரத்தே, எதிரியின் படைகள்! என்ன செய்வது ?

தளபதியை அழைக்கிருர் !

''தாக்கப் புறப்படு!''

''ஆயுதங்கள், யாவும், வீரர்களிடம் இல்லையே! மன்னவா !!''

''எங்கே அவை ?''

''உங்களுக்குத்தான் தெ ரி யு மே. அவை யாவையும், நவமி உத்சவத்தை முன்னிட்டு அரண்மனையில் கொலு வைத்திருக்கிறோம் !!''

பல்லைக் கடிக்கிருன், மன்னவன். பகைவனே, எல்லையில்! என்ன செய்வது? முதலமைச்சர் வைதீகர்—அவனது குருநாதர்—அய்யர், அவனுக்கு யோசனை சொல்லுகிருர். ''மன்னவா! மயங் கா தே. திருவரங்கத்தானின் சேவடியைத் தினம் தினம் தொழுத உண்மையான பக்தனல்லவா, நீ ? வா, இங்கே! கொண்டுவரச்சொல், துளசிச் செடிகளை. போடச்சொல் அரண்மனையைச் சுற்றி !''

''அதனுல் என்ன பலன், அய்யரே! புல், வாளாகிட முடியுமோ? பூண்டு வேலாகித் தாக்குமோ, அந்தத் துருக்கரை !''

''மன்னு ! துளசிச் செடி, சாதாரணமானதா ? விஷ்ணுவுக்குப் பிரீதியான தன்ரோ ! அதைத் தாண்டுவரோ, சன்மார்க்கர்கள் — ரௌரவாதி நரகம் கிடைக்குமன்ரோ......''

தலையசைத்தான், மன்னன்; அரண்மனையைச் சுற்றி, துளசிச் செடிகள் போடப்பட்டன. ஆ யு த ங் க ளோ, கொலுவில் இருந்தன. எதிரிகள் ஏறி வந்த புரவிகள், துளசிச் செடிகளைக் கண்டு, மயங்கிவிடவில்லை! நாரை, கரிக் குருவி, பன்றி போன்ற பக்தர்கள் அல்ல பாருங்கள். அதனுல், சில, ஏதோ பச்சையாக உளதே என்று வாயில் கவ்வின......சில குதிரைகள், மிதித்துத் துவைத்து ஓடின.....முடிவு, மன்னன் காப்பாற்றப் படவில்லை! எதிரிதான் வென்றுன் !!

இந்த முடிவுதானே கிடைக்கும், 'மகாத்மீயங்களால்,' மகேசனை நம்பிட நினைக்கும் எல்லோருக்கும். இதை எங்கே நி னை க் கி ரு ர் க ள், இங் கிருப்போர். ஏதோ, நம் வாயை மூடுவதாக நினைத்து, இப்படி குரங்குக்கும் கொடிக்கும் கோயில் கட்ட முயலுகிருர்கள். இதற்கு ஒத்தூதுகின்றன ஏடுகள்-உலகச் செய்தி நிருபரே, விசேஷ சிரத்தை எ டு த் து க் கொ ள் கி ரு ர். தொடர்கதையாயிருக்கிறது, இந்தத் துயரக் காட்சிகள். புராணகால எண்ணம், இன்னும் போய்விடவில்லை.

★

## வரப்பெற்ருேம்

தோழர் அ. செ. முனிகிருஷ்ணன் அவர்கள், வேமனுவின் புரட்சிக் க வி தை க ளை த மி ழி லே மொழி பெயர்த்து, பொழிப்புரையுடன் இரண்டாம் பதிப்பாக வெளியிட்ட ''வேமனரின்'' பத்தியங்கள் என்ற நூல்வரப் பெற்ருேம். விலை ரூ. 1—8—0.

விபரங்கட்கு :

அ. செ. முனிகிருஷ்ணன்,
55, விளக்கொளிபெருமாள்
கோயில் தெரு
சின்ன காஞ்சீபுரம்.

# 'சட்ட நாதர்'கள் சஞ்சலம்!

"தேவி!"

"நாதா!"

"பார்த்தாயா, மைலாப்பூரை"

"கண்டேன், நாதா"

"ஏனிப்படி சண்டை போடுகிறார்கள்"

"யாரைச் சொல்கிறீர்கள் நாதா?

"கருப்புச் சட்டை அணிந்து உலவும் வக்கில்களைத்தான்"

"வக்கில்களென்றாலே, வம்புதானே நடக்கும் நாதா!"

நம்மிடமன்றோ வம்புக்கு வருகின்றனர்"

"பக்தர்களாச்சே நாதா! அவர்களாவது, நம்மிடம் சண்டைக்கு வருவதாவது"

*

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனான உலகநாதனும் தேவியும், கடந்த சில தினங்களுக்குமுன் சென்னை மயிலாப்பூரில் நடைபெற்ற மாநாட்டைப்பற்றி, உரையாடியிருந்தால், நிச்சயம்—அந்த வக்கீல்கள் பாடு ஆபத்தாகியிருக்கும். துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் ஈசன், அவர்களையெல்லாம் விட்டு வைத்திருக்கமாட்டார். ஏனெனில், ஈசுவரன் படைத்ததாக இவ்வுலகைப்பற்றிக் கூறும் அவர்களே, நீ நான் என்று போட்டி போட்டுக்கொண்டு ஈசுவர சிருஷ்டியையே பழித்திருக்கின்றனர்.

அந்த மாநாட்டிலே தென்பட்டோரெல்லாம், தென்றலை அனுபவிக்கும் வயதினரல்ல; வரண்ட வயதினர்தான் அதிகம். 'பென்ஷன்' பேர்வழிகளும், ஓய்வுநேர உல்லாசிகளும், பேரன் பேத்திகளுடன் சல்லாபம் நடத்தவேண்டியவர்களுமாகக் கூடி, இந்த உலகின் போக்கைப்பற்றி, தீவிரமாக விவாதித்திருக்கின்றனர்.

மாநாட்டைத் துவக்கிவைக்கும் வாய்ப்பைப் பெற்றவர், "இந்து மதமே நமக்கு வாழ்வளிக்கும்" என்பதற்காக, கட்சி ஒன்றை வளர்த்துக்கொண்டுவரும் இந்துமகாசபையின் தலைவர், சட்டர்ஜி என்பவர். மாநாட்டில், 'சுப்ரீம் கோர்ட்' பிரதம நீதிபதியாயிருந்த பதஞ்சலி சாஸ்திரியார் தலைமை வகித்திருக்கிறார். சட்டநாதர்களான வக்கில்கள் பலரும், கூடியிருந்திருக்கின்றனர்.

அங்குபோய், அகப்பட்டுக்கொண்டிருக்கிறார், நிதியமைச்சர் சுப்ரமணியம். பேச, அழைக்கப்பட்டிருந்தாராம்! மந்திரியல்லவா?—இவரும் மகிழ்ச்சியுடன்தான் போயிருந்திருக்கிறார்! ஆனால், கூடியிருந்தது, மந்திரிகளைவிடப் பெரிய தந்திரிகள் எனக் கருதிக்கொண்டிருக்கும் 'மைலாப்பூரும் மாம்பலமும்.' அதனால், அன்பர் சுப்ரமணியம் பேசும்போது, அடிக்கடி குறுக்குக் கேள்விகளை வீசி, குதர்க்கம் செய்திருக்கின்றனர். இதைக் கண்ட உமையொருபாகன், தனது இரண்டு பிள்ளைகளில் ஒருவரான சுப்ரமணியத்தின் பெயரைத் தாங்கியிருக்கும் இந்த 'சுப்ரமணியத்தின் மீது பரிதாபப்பட்டு, "பார், பார்வதி பார்! நமது பக்தர்கள் படுத்தும் பாட்டை," என்று காட்டியிருந்தால்—கோபம்கொண்டு தீக்கண்ணைத் திறந்து அவர்களுக்குப் புத்தி போதித்திருந்தால் — வெகு நன்றாயிருந்திருக்கும், என்று குறிப்பிட அல்ல நாம் உமையொருபாகனையும் உமாதேவியையும் அழைத்தது. அகப்பட்டுக்கொண்டு விழித்த அன்பர் சுப்ரமணியம், அழாத குறையாக, "நான் என் கருத்தைச் சொல்லுகிறேன். அதிலுள்ள தவறுதல்களை எடுத்துச் சொல்வதை விட்டு, ஏனிப்படி, குறுக்கே, கேள்விகள் போடுகிறீர்கள்? நான் பேசிய பிறகு பேசுங்களேன்!" என்று தெரிவித்திருக்கிறார். பிறகு, சச்சிவோத்தம சர் சி. பி. இராமசாமி அய்யர், தலையிட்டு, அமைச்சரின் பிரசங்கம் எப்படியோ ஒருவிதமாக முடிந்திருக்கிறது!

ஏன், அவர்கள் குறுக்கிட்டார்கள், தெரியுமா? அமைச்சர், "பார்ப்பனியமே! பைநாகப்பாய் சுருட்டிக்கொள்! போதும், உன் திருவிளையாடல். இனி, வக்கில்கள், 'மயிலை மாம்பல'த்திலிருந்து மட்டுமல்ல, 'சிந்தாதிரிப்பேட்டை அமிஞ்சிக்கரை'யிலிருந்தும் வருவார்கள்! வரச் செய்வதே, எமதாசை!", என்றெல்லாம், பேசிடவில்லை — கூடியிருந்த 'சட்ட நாதர்'கள் குறுக்கிட.

டில்லி, ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறது — அரசியலமைப்பில்.

அந்தத் திருத்தம் தேவை — யெனப் பேசினார், சுப்ரமணியம்! அது கண்டு அவர்கள், எரிச்சல் கொண்டிருக்கின்றனர்!!

அப்படியென்றால், காங்கிரஸ் சர்க்காரை அவர்கள் எதிர்த்துப் போர் முழக்கம், செய்ய ஆரம்பித்து விட்டார்களா—தென்னாட்டுப் பிரிவினைக்கு ஆக்கம்தர முன் வந்து விட்டார்களா — என்றெண்ணுவீர்கள். செச்சே! அவர்களா, வருவார்கள்! எரிச்சலுக்குக் காரணம், அதுவல்ல; டில்லி, இப்படி திருத்தக்கூடிய அளவில் ஒரு அரசியலைத் தயாரித்து வைத்திருக்கிறதே, என்பதுமல்ல.

கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்தம், சொத்துரிமையைப் பறிக்கிறதாம்! மனிதன் அனுபவிக்கும் சொத்துக்களின் உரிமைக்கு ஊறு விளைவிக்கிறதாம்!!

அப்படியென்ன—நேருவின் சர்க்கார், தனிப்பட்டோரிடம் குவிந்து கிடக்கும் நிலங்களைப் பிடுங்கியும், சிலரிடம் சேர்ந்து கிடக்கும் செல்வத்தைக் கைப்பற்றியும், ஏழைகளுக்கு வழங்க, ஏதாவது ஒரு திருத்தம் கொண்டுவந்துவிட்டதோ, அதனால்தான் எதிர்க்கிறார்களோ, என்றும் எண்ணுவீர்கள்.

அப்படியெல்லாம் செய்யுமா நேரு சர்க்கார்? புள்ளிமானும் வாழும், புலியும் அருகில் உலவும்—எனும் திட்டத்தில், பொதுவுடைமைக்கும் முதலாளித்துவத்துக்கும் சம இடம் தருவதாகவல்லவா கூறிக்கொண்டிருக்கிறது. அது, செய்யுமா. திட்டவட்டமாகவே தெரிவித்திருக்கிறது, **"திருத்தம் கொண்டு வருவது, தனி மனிதர் உரிமையைப்பறிக்க**

அல்ல. அவர்களது சொத்துக்குத் தர வேண்டிய நேர்மையான, பணத்தைக் கொடுத்தே, பெற முயற்சிப்போம்,'' என்பதாக. எனினும், இவர்கள், அத்திருத்தத்தை எதிர்த்திருக்கிறார்கள்.

ஜமீன்தாரி ஒழிப்பு போன்ற சட்டங்கள் மூலம், பெரிய பெரிய ஜமீன்களையெல்லாம் ஒழித்து, அவைகளுக்கு வேண்டிய நஷ்டஈடுகளையும் கொடுத்துவருகிறதல்லவா, காங்கிரஸ் அரசு. இதை எதிர்த்து சிலர் நீதிமன்றங்களுக்குச் செல்ல, அவை இந்தச் சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது என்று சொல்லி, தள்ளிவிட்டன. சொத்துக்களுக்கு மதிப்பிடும் பொறுப்பு, அரசாங்கத்தைச் சேர்ந்தது அல்ல என்றும் கூறின.

அதைக் கண்ட நேரு அரசாங்கம், அதைப் பங்கிடு பண்ணுகிற வகையில், அந்த அரசியலமைப்புக்கு ஒரு திருத்தம் கொண்டுவந்திருக்கிறது— நஷ்டஈடு கிடையாது, என்றல்ல! நஷ்டஈட்டை நிர்ணயிக்கும் அதிகாரம் சர்க்காரின் சபைக்கு உண்டு, என்று.

இதை எதிர்க்கிறார்கள், இவர்கள். இது, கூடாதென, கச்சை கட்டி போர்க்கோலம் பூண்டிருக்கிறார்கள்.

“அமெரிக்காவில் உண்டா?''

“தனி மனிதர் சொத்துரிமை என்பது எவ்வளவு புனிதமான விஷயம், தெரியுமா?''

“அதனருகில், நெருங்கலாமா? அதன் புனிதத் தன்மைக்கு, மாசு கற்பிக்கலாமா?''

“இப்படியெல்லாம் செய்தால், அரசு என்று சொல்லமுடியும், அரசியமைப்பை, திருத்தலாமா? — ஒருமுறை வகுத்துவிட்டால், அது அப்படியே, இருப்பதல்லவா, நீதி?''

இப்படியெல்லாம், பேசியிருக்கிறார்கள் வக்கீல்கள்! இதற்கெல்லாம் பதில் சொல்வதுபோல, அங்கே அன்பர் சுப்ரமணியம் பேச முயன்றார், “அரசியலமைப்பு, என்ன? அழியாத வஸ்துவா! மாறாத சட்டமா! அப்படித்தான், எங்கள் சர்க்கார், என்ன செய்துவிட்டது. சொத்துரிமையே யாருக்கும் கிடையாதென்று திருத்தம் கொண்டுவருகிறது? நஷ்டஈடு தான், தர சித்தமாயிருக்கிறோமே!'' என்றெல்லாம். அதனால்தான், குறுக்குக் கேள்விகள் பூட்டி, குதர்க்கம் விளைவித்திருக்கின்றனர்.

இதில், நமக்கு ஆச்சரியம் அளிப்பது—நேரு அரசாங்கத்தின் அதிமேதாவிலாசத்தைக் காட்டும் அரசியலமைப்புத் திருத்தமோ அல்லது அதன்மீது போர்க்கோலம் பூணும் இவர்களோ, அல்ல. ஏனெனில், நேரு தயார் செய்த அரசியல் சட்டமே, சரியானதல்ல! தலையாட்டிப் பொம்மைகள், தயாரித்தது!!— என்பது நம் கருத்து.

புனிதமான நாம்.

அந்த உரிமை—போகக்கூடாதாம்.

அமெரிக்காவில்கூட, இப்படியில்லையாம்!

இப்படியெல்லாம், ஒரு தனி மனிதனுக்கு இருக்கும் சொத்தைப் பற்றி, கச்சைக்கட்டி, அமெரிக்காவையும் கூட இழுக்கின்றனர்! என்ன செய்வது—அமெரிக்காவில், இவர்களைப்போல, ஐயர்கள் கூடத்தான் இல்லை! அதைப்பற்றி, எண்ணவில்லை. எனினும், நேருவின் இச்சிறு திருத்தம், எங்கே தமது பழைய பாரம்பரிய முறைகளில் கை வைத்து விடுமோ — கம்யூனிசப்பாதையில் இழுத்துச் சென்று விடுமோ, என்று அஞ்சுகின்றனர்! அதற்கு, இப்போதே, சிறு காரியமானாலும் முட்டுக்கட்டைபோட்டு தமது எதிர்ப்பைக் காட்டவேண்டுமெனப் புறப்படுகின்றனர்! அதற்காக வக்கீல்கள் மாநாடு ஒன்று கூட்டி, சஞ்சல முகாரி எழுப்பியிருக்கின்றனர்!!

*

இப்படி எழுப்பிய எவரும் நாஸ்திகர்களல்ல—நாத்திக நாத்தழும்பேறியவர்கள் என்று நம்மை அனுதினமும் ஏசி, அதற்கான சட்டங்கள் மூலம் நம்மை அழிக்க, அரசுக்கு இடம்தேடிக்கொடுக்கும், வல்லுனர்கள். அவர்கள், சொத்துரிமை பற்றி போர் முழக்கம், செய்வதுதான் ஆச்சரியமாயிருக்கிறது!!

“சர்வேஸ்வரன்—தயாபரன்—ஜீவராசிகளை ரட்சிக்க வேண்டி, இந்தப் பூலோகத்தைப்படைத்தார். பொன்னையும், விண்ணையும் படைத்தார். தூணும் நானே! துரும்பும் நானே! புழுவும் நானே! தருவும் நானே!'', என்றார், என்று, கோர்ட்டுக்குச் சென்றுவிட்டு, வீட்டுக்கு வந்ததும் உட்கார்ந்து கொண்டு, விஸ்தாரமான விவாதம் நடத்துபவர்கள்! 'உலகெலாம், அவனது படைப்பு என்று கண்ணைமூடி ஜபித்த வண்ணம், பூஜை நடத்துபவர்கள்!! — அவர்கள், ‘தனி மனிதனின் சொத்துக்கு', சல்லடம் கட்டுகிறார்கள்; மாநாடு கூட்டி, சங்கநாதம் செய்கிறார்கள்.

இதனை, அவர்கள் நம்பும் ஈஸ்வரன் கண்டிருந்தால், தேவியிடம் பேசும் வாய்ப்பைப்பெற்றிருந்தால்— என்னென்ன சொல்லி, வேதனைப் படுவார். ‘உலகமே, நான். நானே, உலகம். அங்குள்ள பொருள்கள் யாவும், எனக்கே சொந்தமெனச் சொல்லும் இவர்கள், அடிக்கின்ற கொட்டத்தைப்பார். ஒருவனின் தேவைக்கே இத்தேசம் இருக்க வேண்டுமாம்—நமது படைபபில். ஒரு மனிதன் இல்லாதவனாக வீதியில் கிடந்துழலும்போது, இன்னொருவன் ஏழடுக்குமாடியில் கிடந்து சுகபோகம் அனுபவிக்க வேண்டுமாம். அப்படிப்பட்ட சொத்துரிமை, நிலைத்து நீடிக்கவேண்டாமாம். பார்த்தாயா, பக்தர்களெனும் இப்பாவிகளை,'' என்று சொல்லி, திக்கண்ணையோ, சூலாயுதத்தையோ, விசாமலாயிருப்பார். எங்கே, செய்கிறார், அந்த ஈசன். அந்தத் தைரியம்தான், சட்டநாதர்களுக்கு. மனிதர்களுக்கு நீதி வழங்கவேண்டிய சட்டங்களைக் கற்று, அவனுக்கு அநீதி வழங்கும் ஏற்பாடுகள் அழியாமற்காக்க, சல்லடம் கட்டுகிறார்கள். நல்ல, சட்டநாதர்கள். இவர்களைப் பெரியவர்களாக்கிவைத்திருக்கின்ற, நல்ல நாடு, இது.

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

**மானேஜர்.**

# சேராத கடிதம்!

எல்லாம் வல்லவரான பண்டித நேருஜியின் கிருபாகடாட்சத்துக்குப் பாத்திரமாயும், இங்குள்ள நம்மளவாளின் ஏகப்பிரதிநிதி போலவும் விளங்கி, இராஜகோபாலாச்சாரியைப் போல் இந்த காமராஜுடன் சண்டை போட்டுக்கொள்ளாது, பெரியவாள் ஏற்படுத்திவைத்த சாம-தான-பேத-தண்டமெனும் முறைகளை மனதிலே வைத்து, மந்திரித் தொழிலில் கீர்த்தியுடன் விளங்கிவரும் கிருஷ்ணமாச்சாரியார் அவர்களுக்கு, தென்கலை தீனதயாளன் என்று நம்மளவாளாலும், 'தேசமூர்த்தி' என ஊர் மக்களாலும் அழைக்கப்படும், அடியேன் எழுதுகின்ற விஞ்ஞாபனம்:—

பெரியீர்!

அடிக்கடி உங்களைப்பற்றி, பேப்பர்லே படிக்கும்போதெல்லாம், எனக்கு ஆனந்தமாயிருக்கும். பண்டித நேருகூட, பல விஷயங்களில், உங்களோடே கலந்து பேசித்தான் காரியம் செய்யறதா, டில்லியிலேருந்து வந்த என் ஆத்துக்காரியின் அக்கா புருஷன், சொன்னார். அதைச் சொல்லிச் சொல்லி, ஆனந்தப்பட்டேன், ஒரு மாதம்! நம்ம ஊர், குளத்தங்கரை, அரசமரத்தடியெல்லாம், அதைப் பற்றித்தான் நம்மளவாளும் பேசினா. பண்டிதநேருவைவிட பெரியவரா யிருக்கலாம், நம்ம ராஜாஜி. கிறுக்குக் குணம்! கிடைச்சதுக்கெல்லாம் ஆசைப்பட்டு, கீர்த்தியைக் குலைச்சுண்டு கிருஷ்ண, ராமான்னு, கிடக்கிறார். பரிதாபமாயிருக்கு, நினைக்கிறப்போ. அந்தக் கவலையைப் போக்கிற விதத்திலே, டில்லியிலே நீங்க இருக்கிறதாக் கேள்விப்படறப்ப எல்லாம், பெரிய குறை தீர்ந்ததுபோல, நாங்கள்ளாம் பேசுகிற வழக்கம்—திடீர்னு, சில நாட்களுக்கு முந்தி, உங்களுக்கும் நேருவுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதாகவும், அதனாலே விலகப்போவதாகவும் பேப்பர்லே போட்டிருந்ததாகச் சொன்னா!

நேக்கு ரொம்பவும், பயமாயிருந்தது. ஒரே ஒருத்தர்! எப்படியோ, ஜெயிச்சு, மந்திரியாப் போயிருக்கார் — அவருக்கும் ஆபத்தான்னு, அங்கமெல்லாம் ஒரே துடிப்பாத் துடிச்சுது. ஏதோ, ஒரு இரும்பு ஆலையை, பிர்லாவுக்குக் கொடுக்கணும்னு நீங்க, சொன்னதாகவும், நேரு, சர்க்கார் சார்பிலே ஆரம்பிக்கணும்னு சொன்னதாகவும் அதனாலே கருத்து வேற்றுமை கிளம்பியிருப்பதாகவும் எழுதியிருந்தா. ஏன், இந்த விஷயத்திலேயெல்லாம் வம்புன்னு நினைச்சேன்! என்னதான் ராஜினாமா செய்துட்டு இங்கே வந்தாலும் காமராஜு சிநேகிதராச்சேன்னு நினைச்சாலும்-மூர்த்தியிருக்கிற இடத்திலே கிடைக்கிற கீர்த்தி ஆகுமோ! அதனாலேதான், அப்படி நினைச்சேன். நல்லவேளையா, அப்படியொண்ணும் நேரலே. மெத்த சந்தோஷம். அதுக்கப்புறம், பார்லிமெண்டிலே நீங்க பேசினதைப் படிச்சதா, நம்ம ஊர் கர்ணத்து மாப்பிள்ளை சொன்னான்.

"ரொம்பப் பெரிய பணக்காரராயிருப்பது, அருவருக்கத்தக்கது. ஜனங்களில் சிலர் பட்டினி கிடக்கும்போது, பெரிய பெரிய கார்களில் போவதும், அரண்மனை போன்ற இடங்களில் வசிப்பதும், தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டேயிருப்பதும், அருவருக்கத்தக்கது." "இந்து"வில் இதை வெளியிட்டிருந்தாளாம்,

"It is immoral to be very rich. It is immoral for people to go about in big Cars and live in palaces and flavnt their wealth when at the same time some people were starving." என்று.

இப்படித்தான், பேசணும். பிர்லாவுக்கு உதவி செய்ய நினைக்கிறேள் — பிரிட்டிஷ்காரனுக்கு ஏஜண்டாயிருக்கேள் — அமெரிக்கனுக்கு சகாயம் செய்து கொடுப்பதில் ஆனந்தப் படறேள், என்றெல்லாம் பேசறவா, இப்ப என்ன சொல்ல முடியும். வெளுத்துக் கட்டிவிட்டேள்—காரில், சிலர். வீதியில் பலர். மாளிகையில் சிலர். மண் குடிசையில் பலர் — என்று அழகாப் பேசுவா, இந்தக் கழகத்தார். அவர்களையும் தூக்கியடிக்கிறது போலப் பேசியிருக்கேள். இதைக் கேட்டப்ப, நிச்சயம் பண்டித நேரு, வெட்கப்பட்டிருப்பார்! ஏன்னா, அவரைவிட ஒருபடி மேலே போயே, பேசியிருக்கேள். 'ஜனங்க பட்டினிகிடக்கப்ப, மாடி வீடுகளில் வசிப்பதா?'—அடடா! என்ன, பேச்சு! அன்ன அர்த்தபுஷ்டி! இது போல, பண்டிதர் ஒருபடி போனா, அவரைவிட ஒருபடி மேலே போயி பேசணும் கிறதுதான், எங்களோடெ அபிலாஷை. அதனால் என்ன, மெட்ராசிலே அரண்மனைபோலிருக்கிற, உங்கவீடு, சொந்தமாயிருக்கிற பெரிய கம்பெனி, பெரிய கார்கள் — இவைகளைப்பற்றி இந்த ஜனங்க, கேட்கவா முடியும். கேட்டா, அதெல்லாம் என் பிள்ளைகள் சம்பந்தப்பட்டதுன்னு — பதில் சொல்லவா, தங்களுக்குத் தெரியாது. இப்படியே, ஜமாயுங்கள்.

அப்புறம், கொஞ்சம் தெளிவாகவே, ஒரு நாள் பார்லிமெண்டிலே சொன்னேளாம்—"பண்டித நேருவுக்கும் மற்ற மந்திரிகளுக்குமிடையே கருத்து வேற்றுமையென்று இல்லாததையெல்லாம் கிளப்பி, அவரையும் மந்திரிகளையும் பிரித்துவிட, எதிர்க்கட்சிக்காரர்கள் முயற்சிப்பது, நல்லதல்ல", என்று.

ஏனிப்படி பேசினீர்கள் என்றுதான் இங்கேயுள்ள நம்மளவா நினைக்கிறா. இதனால். மூடிவைச்சிருந்த விஷயத்தை வெளிப்படுத்துறதுபோல ஒரு எண்ணம் ஏற்படுமோன்னு, எங்களுக்கு அச்சம். ஜாக்கிரதையாத்தான் பேசியிருக்கேள். 'பிரதமரையும் மந்திரிகளையும் பிரித்துவிட......' என்று. ஆனால், அது எவ்வளவு அர்த்தத்தைக் கொடுக்கிறது பாருங்கள், தந்திரமான பேச்சுத்தான். தங்களுடைய திறமையைப்பற்றி, நேருகூட மெச்சிண்டிருப்பார்...ஆனா, அப்படி நீங்க பேசினதைக் கேட்டுட்டு, இங்கேயிருக்கிற சுப்ரமண்யம் — அதான்னா, சட்ட மந்திரியா இருக்கே ஒண்ணு — அதுவும், அசெம்பிளியிலே அப்படியே உளறியிருக்கு. காமராஜருக்கும் அவருக்கும் ஒத்துவராதுங்கிற விஷயம்—அசெம்பிளி எலக்ஷன்லேகூட, இது அவரோடே போட்டியிட்டுத் தோத்துது. ராஜாஜியோடே ஊர் ஊராத் திரிஞ்சுது. அவர்கூட 'என் அனுமாரே' என்று ஆஸ்யமா கூப்பிடுவார். ஆகா, பெரிய பெருமைன்னு நினைச்சுண்டு இருந்தது. அப்படிப்பட்ட சுப்ரமண்யமும், அசெம்பிளியிலே சொன்னாராம் — என்ன, அதுன்னும் அவர்ன்னும் கலந்து கலந்து எழுதறேன்னு நினைக்கிறேளா; அது அப்படித்தான்—"எனக்கும் முதலமைச்சருக்கும் இடையிலே தகராறு இருப்பதாகச் செய்திகளைக் கிளப்பிவிடுவது, எனக்கோ அல்லது முதலமைச்சருக்கோ நியாயம் வழங்கியதாகாது" என்று.

இதுவும், உங்க, 'டைப்'பில் பேசியதால், உங்களைப்பற்றியும் சம்சயம் ஏற்படாதோன்னு, என் சகதர்மணிகூடக் கேட்கிறா! அதனாலே, கொஞ்சம், ஜாக்ரதையாகவே இருக்கச் சொல்லுங்கோன்னும்—சொல்றா. காலதேச வர்த்தமானத்தைப் பார்த்தா, எதைப் பற்றியும், நிச்சயமா சொல்லமுடியலே-கட்ஜு பார்லிமெண்டிலே சொன்னாராம், "வேலைக்கு சிபார்சு செய்தபடியே, எதிர்க்கட்சிக்காரர்களும் சரி, சொந்தக் கட்சிக்காரர்களும்சரி, ஒவ்வொரு மந்திரியின் அறையாய் நுழைந்து கொண்டிருக்கிறார்கள்." என்று. அதைப் படிச்சேன். ஆனாலும், அம்பி அங்கே; வர்றான். கவனிச்சுக்குங்கோ......

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 9—1—55 [ஞாயிறு

# வளரும் வடக்கு!

★

சரிதம் திரும்பிவிட்டதாம்!—சாக்ராப்ட் என்பவர், அலறுகிறார்.

சாக்ராப்ட், பிரிட்டிஷ் துணி உற்பத்தியாளர்களின் தலைவர். அவர், அலறுகிறார்.

இந்தியாவின் துணிகள், ஏராளமாக நுழைய ஆரம்பித்துவிட்டதாம், பிரிட்டனுக்குள்! இப்படியே நிலைமை நீடித்தால், லங்காஷயரும், மான்செஸ்டரும் ஸ்தம்பிக்குமாம்—வேலையில்லாக் கஷ்டம்கூட ஏற்பட நேரலாமாம். சர்க்காரை, எச்சரிக்கிறார், சாக்ராப்ட் — "மான்செஸ்டர் கார்டியன்" எனும் பத்திரிகையில்.

"சீமைக்கு மார்க்கெட்டாக இருக்கிறது, இந்தியா," என்று தேசியத் தலைவர்கள் கர்ஜித்தது, அந்தக் காலம்! பரதேசித் துணிகளைப் பகிஷ்கரிப்பதற்காக, இயக்கம், நடத்தப்பட்டது ஒரு காலம்!!

இப்போது, இந்தியாவின் ஆலைத் துணிகள், அங்கே இடம் பிடித்துக் கொண்டதாம்-அலறுகிறார், அவர்.

சீமையில் தயாரிக்கப்படும் துணிகளைவிட இந்தியாவிலிருந்து வரும் துணிகள் விலை குறைவாக இருக்கிறதாம்! அதனால், பிரிட்டனில், இந்தியத் துணிகளுக்கு 'கிராக்கி' ஏராளமாக இருக்கிறதாம்!!

இதேபோல, முன்பெல்லாம், இந்தியத் தலைவர்கள் சொல்லுவார்கள்—"விலை அதிகமாயிருந்தாலும்கூட, சுதேசித் துணிகளையே வாங்குவீர்! சுயராஜ்ய தேவியைப் போஷிப்பீர்!" என்று. இப்போது, இந்தியா மிஞ்சுகிறது! லங்காஷியர் மிரளுகிறது!!

இங்கிலாந்திலே, குவியும், இந்தியத் துணிகள் எவை? காஞ்சீபுரம் பட்டா? கொரநாடுசேலையா? சின்னாளப்பட்டி செயற்கைப் பட்டா! சேலமா? கோவையா? அல்ல, அல்ல. கைத்தறித் துணிகள் அல்ல! ஆலைத் துணிகள்.

பம்பாயிலிருந்து தயாரிக்கப்படும், ஆலைத் துணிகள்.

லங்காஷியரை மிஞ்சுகிறது, பம்பாய்!

சரிதம், திரும்புகிறதே! — என்கிறார், பிரிட்டிஷ் துணி உற்பத்தியாளர் சங்கத் தலைவர், சாக்ராப்ட்.

*

இங்கிலேயே, ஏற்படும் என்றோம்' இந்திய சுயராஜ்யம் குறித்து, இங்குள்ளோர், வெற்றி முரசம் கொட்டிய நேரத்தில். "சுதந்திர தேவி, சும்மாவரவில்லை! நாங்கள் சிந்திய இரத்தத்தின் விளைவால், மலருகிறாள்" என்று மார்தட்டியபோது, "உண்மை, ஐயனே, உண்மை. நீங்கள், குருதி கொட்டியது உண்மை. ஆனால், அதுமட்டுமலல, இன்று வெள்ளையன் வெளியேறுவதற்குக் காரணம். அவன், இந்திய முதலாளிகளிடம் தக்க திட்டம் பேசி வைத்துக்கொண்டே, வெளியேறுகிறான்" எனச் சொன்னோம்.

வெள்ளை ஏகாதிபத்தியம் மாறி பழுப்பு ஏகாதிபத்தியம் வருகிறது எனக் குறிப்பிட்டோம் — வெள்ளையனுக்கும் வடவருக்கும் இடையிலேற்பட்ட, வியாபார ஒப்பந்தங்களைக் குறிப்பிட்டு.

சுயராஜ்யம், வடக்குக்கே ஒழிய, அதன் முழு மணமும் நமக்குக் கிட்டாது—என்றோம். விளக்கத்தை, பிதற்றல் என்றெண்ணினர்—வடவரல்ல—நமது நண்பர்கள். இதோ, செய்தி. பணம் வருகிறது, பம்பாய்க்கு—வெள்ளையன் தருகிற பணம்.

"அதனால் என்ன? ஒருபோது, வெள்ளை முதலாளி சுரண்டிச் சென்றதுபோல, இப்போது நமது முதலாளி அந்த நாட்டு மக்களின் பணத்தைச் சுரண்டி வருகிறான். இதில் தவறென்ன, அந்தளவுக்கு புத்தியூகம் கொண்டுவிட்ட, நமது முதலாளிகளை, நமது சர்க்கார் பாராட்டவல்லவோ வேண்டும்" எனக்கூற வரலாம், பராக்குப் படையினர்.

அதனால், வீம்பு விளங்குமே ஒழிய, விவேகம் தென்படாது.

சில திங்களுக்கு முன்பு, ஆமதாபாத், பம்பாய் போன்ற இடங்களிலுள்ள ஆலையரசர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துபோய், "எங்கள் தொழில் நசிகிறது. போதிய இலாபம் வரவில்லை." என்று டில்லியினரைச் சந்தித்ததை, அறிவோம், நாம். அப்படிச் சொல்லி, ஆமதாபாத் போன்ற இடங்களில், ஆலைகள் மூடப்பட்டு, தொழிலாளர்கள் அவதியுற்றோர்களாக அலைந்ததையும் நாடு அறியும். அப்போது, அவர்களுக்காகப் பரிந்து பேசினார். அன்பர் கிருஷ்ணமாச்சாரி—டில்லி, மந்திரி.

இதோ, லங்காஷயர், கூறுகிறது' இங்கிலாந்தின் பணம் கொள்ளை போகிறது என்று.

எனவே, நேருவின் கைக்கு அதிகாரம் வந்ததால், வடக்கின் வளம் அதிகமாயிருக்கிறதென்பது விளங்கும். வளம், மக்களுக்கு ஏற்படாமலிருக்கலாம்! ஆனால், நிச்சயம் பணதிபதிகளுக்குக் கிடைத்துத் தானிருக்கும்!! இல்லையென்றால், பிர்லா, இலங்கை போன்ற இடங்களைத்தேடி அலைவாரா, ஆலைகளைத் துவங்க.

*

வளம் கொழிக்கிறது, வடக்கே!

தெற்கேயோ, செய்திகள் வருகின்றன, கலங்கக்கூடிய வகையில்.

கைத்தறி, நசிப்பதுமட்டுமல்ல—வேறு வழிகளிலும், நாடு வளம் பெறும் வழிகள் தெரியவில்லை.

வடவர் பூமி, ஆலையரசு!—என்று, அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம்.

அங்கே ஆலைகளை அமைப்பதிலும், பெரிய பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதிலுமே, டில்லி அரசு, கவனம் செலுத்துகிறது—என்று, நாம்மட்டுமல்ல — நல்லவர்கள் யாவருமே, மேடைகளில் மட்டுமல்ல, பாராளும் சபையில் கூட இடித்துரைத்து வந்திருக்கிறார்கள்.

பலன்! பெரிய பூஜ்யம்தான் இதுவரையில்.

இப்படி வடக்கு வாழ, தெற்கு தேய நம்மவர்களும் ஒத்தாதுகின்றனர் என்றும், நாம் எடுத்துக்காட்டத் தயங்கியதில்லை. அப்போதெல்லாம் மறுப்பர், நமது காங்கிரஸ் அன்பர்கள்.

இதோ, ஒருவர் காட்சியளிக்கிறார்! கிண்டலும், காரமும் கலந்து கலந்து, தெரிவிக்கிறார். தென்னாடு, இலாயக்கில்லையாம் — ஓரே ஒரு இரும்பு ஆலை நிறுவ.

ஒரு நாட்டின் வளத்தை மதிப்பிடும்போது, அங்குள்ள எஃகு — இரும்பு ஆலையையே பெரிய விசேஷமாக, எண்ணுகிறது இற்றை நாள் உலகம். விமானங்கள் பறக்கவும், ரயில்கள் ஓடவும். கார்கள் தயாரிக்கப்படவும், ஜனிமாட கூடங்கள் அமைக்கப்படவும், துளைக்கும் பீரங்கிகள் செய்யவும், அழிக்கும் டாங்கியை உண்டாக்கவும், மிகமிக முக்கியமான பொருள், இரும்பும் எஃகும்! போருக்கு மட்டுமல்ல, நாட்டின் நல்வாழ்வுக்கும், இவை முக்கியம்.

இதற்கோர், ஆலை! இங்கே!!— ஆசை முகம் காட்டி, கெஞ்சுகின்றனர், வடக்கை.

கிருஷ்ணர், தெரிவிக்கிறார், 'முடியாது' ஏனெனில் இலாயக்கில்லை!" என்று.

"ஏன் இலாயக்கில்லை? இதோ, இரும்பு இருக்கிறது, சேலத்தில்! அதை உருக்கும் நிலக்கரி இருக்கிறது நெய்வேலியில்! இவைதானே வேண்டும், இரும்பாலைக்கு. இந்த் இரண்டும்இருக்கும்போது,இலாயக்கில்லை என்று தெரிவிக்க யாரய்யா, நீர்—யார்?"

—கேட்பது, நாம் அல்ல, தோழர் எஸ். வி. இராமசாமி எனும் பார்லிமெண்டு உறுப்பினர். காங்கிரஸ்காரர். அண்மையில் சேலம் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்ற, மாவட்ட அபிவிருத்தி போர்டு கூட்டத்தில், இவ்வண்ணம் கேட்டிருக்கிறார். அவசியம் சேலத்தில் ஆலை அமைக்கவேண்டுமென்று டில்லியை வற்புறுத்துமாறு சென்னை சர்க்காரைக் கோரி தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

பம்பாய், ஆலையூர்!

அது, மிஞ்சுகிறது, லங்காஷியரை!!

தென்னகம்—தறியூர்!

தவிக்கிறது, பல் காட்டி!!

*

வந்தசுதந்திரம், வடவர் பூமிக்கே வாழ்வளிக்கும் என்று, பொருளாதாரத்துறையை வைத்துமட்டுமல்ல—சமுதாயம், மொழி, அரசியல் எல்லாவற்றையும் காரணம் காட்டி எடுத்துரைத்து வருகிறோம். இதனை, இன்றும், ஏற்காதோர் உளர். "இந்தியா ஒரு நாடாயிற்றே" என்ற பல்லவியையே பாடிக் காட்டுவர்.

"அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்களென்றால், இதய பூர்வமாக அல்ல. ஏதோ சொல்லுகிறார்கள் பழைய பழக்கத்தால். பிரச்னை புரியும்போது, அவர்களும் 'ஆமாம்' போடுகிறார்கள்"

என்று, சச்சிவோத்தம சர். சி.பி. இராமசாமி அய்யர், தெரிவித்திருக்கிறார்—மயிலாப்பூர் நடாத்திய வக்கீல்கள் மாநாட்டில்.

"உதட்டுச்சொல்," தருபவர்களாம், அவர்கள். ஆங்கிலத்தில், அழகாக வர்ணிக்கிறார். "ஊரெல்லாம் சுற்றிப் பார்த்தேன், சென்ற இடமெல்லாம்......", அப்படியே இருக்கிறது, என வர்ணிக்கிறார்.

இந்தியை வடவர் புகுத்த நினைப்பதுபற்றி மொழி ஏகாதிபத்யம் என்று, நாம் குறிப்பிட்டு வருகிறோமல்லவா? இதே உணர்ச்சி, பம்பாய், குஜரத், பீகார், ராஜஸ்தான், வங்கம் முதலிய எல்லா இடங்களிலும், இருக்கிறதாம். அவர்கள், "ஆகா! இந்தியே, நமது தேசியமொழி," என்று 'உதட்டுச்சொல்' தந்தாலும், உண்மையை நான் கண்டேன். ஒவ்வொருவரும் தத்தமது மொழியிலேயே எல்லாக் காரியங்களையும் நடத்தவேண்டுமெனக் கருதுகின்றனர். இப்படியிருக்கும்போது, எங்கேயிருக்கிறது, ஏக இந்திய உணர்ச்சி'—என்று, கேட்கிறார், அவர்.

சச்சிவோத்தமர், பிரிவினை விரும்பியல்ல! எனினும், இதனைச் சுட்டிக் காட்டுகிறார்.

"இன்னொரு பிரச்னையும் இருக்கிறது. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னை, தமிழன் என்றோ, தெலுங்கன் என்றோ, மராட்டியன் என்றோ, குஜராத்தி என்றோ எண்ணுகின்றார்கள். இந்த அடிப்படையில், நாடுகள் அமைக்கப்பட வேண்டுமெனவும், கிளர்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள்"

குறிப்பிடுவது, சி. பி. இராமசாமி அய்யர்! அண்ணாமலை, காசி—ஆகிய இரு பல்கலைக் கழகங்களின் ஏக துணை வேந்தர்!!

இது, நாம் கூறி வரும், மொழி ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி எல்லா இடங்களிலும் இருப்பதை விளக்குகிறது.

எங்கே, இருக்கிறது, இந்தியா?— இப்படி ஒவ்வொருவரும் எண்ணத் தலைப்பட்டால்.,.....

அதனை உணராது, அதே நேரத்தில் தமது பூமிவளம் பெறும் வகையையும் இழக்கவேண்டியவர்களாயிருந்து வருகிறார்கள்—நமது நண்பர்கள். இதைச் சுட்டிக் காட்டும் நம்மீதும் பாய்கிறார்கள்.

*

சர். சி. பி. இராமசாமி, கண்டுவந்தேன்! என்கிறார்.

சேலத்து இராமசாமி, "ஏன் இலாயக்கில்லை, எமது தென்னாடு!" என்று கேட்கிறார்.

இதே கேள்விகளை, அண்மையில் ஆவடியில் கூட இருக்கிற, காங்கிரஸ் கமிட்டியில், தென்னகத்துப்

## புரியாத கோளாறு!

"திராவிடரல்லாதவர்களை யெல்லாம், விரட்டவேண்டுமென்பதே அவர்தன் இலட்சியம்"

*

அமைச்சர் பீடத்தை அலங்கரிக்கும் வாய்ப்பு பெற்ற தோழர் சுப்ரமணியம், நாடக தடை சட்டத்தைப் பற்றிய விவாதத்துக்குப் பதிலளிக்கும்போது, இவ்வாறு குறிப்பிட்டாராம்.

ஒவ்வொரு கட்சியும், இந்தச் சட்டத்தை, ஏன் எதிர்க்கிறது, என்று 'விளக்கிக்கொண்டு வரும்போது 'சபையில், திராவிட பார்லிமெண்டு, கட்சியினரும் எதிர்க்கிறார்கள். தெற்கு வேறு—வடக்கு வேறு என்பதே அவர்களுடைய அடிப்படைக் கொள்கை. தென்னாடு, தனியாக பிரிக்கப்பட்டு, அங்கிருக்கும் திராவிடரல்லாதவரெல்லாம் விரட்டப்படவேண்டுமென்பதே அவர்கள், கொள்கை. இதற்குக் குறுக்கே வரும் எல்லா சட்டங்களையும் அவர்கள் எதிர்ப்பார்கள்" என்று தெரிவித்தாராம்.

அரைகுறை 'அறிவு' எப்போதுமே ஆபத்து. திராவிட நாட்டிலிருந்து திராவிடரல்லாதவர்களை விரட்டவேண்டுமென்று, திராவிட பார்லிமெண்டு கட்சி, எப்போது சொல்லிற்று? அல்லது திராவிட முன்னேற்றக் கழகமாவது சொல்லியதுண்டா? அமைச்சர் சுப்ரமணியம், எங்கிருந்து பெற்றார், இந்தத் தகவலை?

பிரதிநிதிகள் சிலர், கிளப்ப இருப்பதாக "மெயில்" ஏடு கூறுகிறது.

> மொழி ஏகாதிபத்யத்தைச் சகியோம்.
> தென்னாட்டுக்கும் ஆலை வளர்ச்சி வேண்டும்.

என்று, சில தீர்மானங்கள் செல்லப் போகின்றனவாம்! தீர்மானங்கள் மாநாடுவரையில் செல்லுமோ, நடுவழியிலேயே 'குரல்வளை' நெறிக்கப்படுமோ, நாம் அறியோம்.

ஆனால், இப்படி ஒரு விதக் 'கோபம்' அந்த வட்டாரத்தில், அரும்பியிருப்பதுமட்டும் உண்மை! சச்சிவோத்தமர் குறிப்பிடுவது போல,வெளிப்படையாகச்சொல்லாவிடினும், உள்ளத்தில் இந்த உணர்ச்சி இல்லாமலிருக்காது!!

ஏனெனில், 'லங்காஷியர்' மிரளம் பம்பாய் வாழ்வதையும், தெற்கு தேய வடக்கில் புது ஆலைகள் அமைக்கப்படுவதையும், நம்மைப் போல அவர்களும் உணர்ந்தே வருகிறார்கள். "இந்தி மொழியை இன்னும் பதினைந்து ஆண்டுகளில், அரசு மொழியாவதனின்றும் தடுக்கப்பட வேண்டும்" என 'நமது' நிதியமைச்சர் சுப்ரமணியமே, சொல்லியிருக்கிறார், மயிலை மாநாட்டில்.

அந்தளவுக்கு, அங்கெல்லாம் ஒவ்வொரு பிரச்னையிலும், அலைகள் எழும்பாமலில்லை! ஆயினும், நாம் சொல்லும்போது, "இதையெல்லாம் பரஸ்பரம் பேசித் தீர்த்துக் கொண்டு, நாம் எப்போதும் ஏக இந்தியாவைச் சிதறவிடாமல்வைத்துக் கொள்ளலாம்", என்று எண்ணுகிறார்கள்.

அவர்கள், சிந்தனையில், வளரும் பம்பாய் தெரிய, கொஞ்ச காலம் செல்லலாம்! ஆனால், என்றுமே தெரியாமல் இருந்துவிடாது.

வந்த சுயராஜ்யம், வடக்குக்கே ஒழிய, தெற்குக்கு அல்ல — என்பதை, நெடுநாட்கள், யாராலும் மறைத்துவிட முடியாது.

லங்காஷியரே — மிரளுமளவுக்கு வளர்ந்திருக்கிறது, பம்பாய். அதுவும் ஏழாண்டு சுயராஜ்யத்தில்!

இதுபோல, ஒவ்வொரு துறையிலும் வடக்கு 'ஆலையூராகி'க் கொண்டேயிருந்தால்.........இராமசாமிகள் அந்தக்கூடாரத்திலிருந்து அல்ல, நமது கூடாரத்துக்கு வந்தே பேச நேரும்! அந்தக்காலம் வெகு தூரத்திலில்லை!!

★

# ★ கதிரோனிலிருந்து! ★

காலை மலர்கிறது! கதிரோன் முளைக்கிறான்!!

கிழ்த்திசையிலிருந்து, மேல்திசை வரைக்கும், குதிரை பூட்டிய ரதத்தில் அவன் பிரயாணம் செய்வதாகப் பேசாத புராணங்களில்லை.

சூரிய ஒளியைக் கண்டு, ஆசை கொண்டிருக்கிறாள், அஸ்தினாபுரத்து ஐவரின் அன்னை, குந்திதேவி! இரகசியமாகவும் பெற்றெடுத்திருக்கிறாள், கர்ணனை!— பாரதம் சொல்கிறது.

இதே சூரிய ஒளியைக் கண்டு, குழந்தை உருவத்திலிருந்தது. அனுமன், ஏதோ ஒரு கனியென நினைத்துத் தாவிப் பாய்ந்தானாம் பிடிக்க— பாகவதர், வர்ணிக்கிறார், அனுமன் பெருமையைச் சொல்ல.

சூரிய நமஸ்காரம்! சந்தியாவனுஷ்டானம்!! — குறைச்சலில்லை, நமது நாட்டில்.

சூரியனைப்பற்றிய நம்மவர் எண்ணம் அந்தக் காலத்திலிருந்து, இந்தக் காலம்வரை, சிறிது கூட மாறாமலிருந்து வருகிறது.

சூரியன் பெயரால், கோயிலும் குளமும் கூட உண்டு, நமது நாட்டில்.

ஆனால், இதோ ஒரு செய்தி! கோயிலில்லா ஊரிலிருந்து.

சூரிய ஒளியால் சர்க்கரை தயாரிக்கப் போகிறார்களாம்.

கரும்பிலிருந்தல்ல, சூரிய வெளிச்சத்திலிருந்து. சர்க்கரை, தோழர்களே, சர்க்கரை! தகிக்கின்ற கிரணம், ருசிக்கின்ற சர்க்கரையைத் தருமாம்.

கலிபோர்னியாவிலுள்ள பெர்க்லி எனும் இடத்திலிருந்து டிச. 30-ந் தேதி, இவ்விதம் ஓர் செய்தி வந்துள்ளது. சூரியனை, தனது தலைப்பில் தாங்கியுள்ள 'இந்து' ஏடுதான் தருகிறது, இச்செய்தியை.

சர்க்கரையை மட்டுமல்ல, சத்துப் பொருள்கள்கூட தயார் செய்யலாமாம்.

செடி கொடிகளுக்கு வெளியே இருக்கும் சூரிய வெளிச்சத்திலிருக்கும் கரியமிலவாயு, நீர்—இரண்டிலிருந்தும், இந்தப் பொருள்களைச் செய்யமுடியுமாம்.

கலிபோர்னியா பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் அறிவித்திருக்கிறார்; சூரிய ஒளியால், மின்சார சக்தியைப் பெறலாம் என்பது, முன்பே அறிவிக்கப்பட்ட விஞ்ஞான முடிவு.

நாமோ, பிரசாத், சூரிய ஒளியால் சமையல் செய்தார்—என்கிற பெருமையைச் சொல்லி, அதை ஆச்சரியத்துடன், நாலுபேரிடம் பேசி, அந்தளவிலே நின்றுவிடுகிறோம்.

விஞ்ஞான மேதைகளும், ஒரு பக்கம் ஆராய்ச்சிகளைப்பற்றிப் பேசிய வண்ணம், இன்னொருபக்கம் சூரிய கிரகணத்துக்கு தர்ப்பணமும் செய்து கொண்டிருக்கிறார்கள்!

கதிரோன் முளைக்கிறான்! நம்மவர் கையெடுத்துக்கும்பிடுகிறார்கள்— அவர்களோ, ஆராய்ச்சி நடத்துகின்றனர்.

★

7-ம் பக்கத் தொடர்ச்சி

கடைசியா, ஒரு வார்த்தை! இரும்பாலை சம்பந்தமா, தென்னிந்தியா இல்லாயக்கில்லேன்னு சொல்லியதாகவும் அதனால் இங்குள்ள பலருக்கு உங்கள்மீது ஆத்திரம் இருக்கிறதாகவும் ஊர்லே, பிரஸ்தாபம்......அதைப்பற்றியெல்லாம் பயப்படாதேள். எப்படி ஆனாலும் நாங்க இருக்கோம். இரும்பாலை ஏற்படாமெப்போனா, "சூட்சுமமாச் சொன்னார், கிருஷ்ணமாச்சாரி! அதை யுணர்ந்து காரியம் ஆற்றத் தெரியலே, காமராஜுக்கு!",ன்னு ஒரு போடு போடறோம். இரும்பாலை ஏற்பட்டுது. அதுக்கும், இருக்கு, நல்ல பதில்." எப்படி உண்டாச்சு? எங்க, டி. டி. கே. டில்லியிலே இருக்கிற விஷயத்தை இங்கே வந்து சொன்னார் —நமக்கெல்லாம், ஆத்திரம் உண்டாக்கிறபடி. சொன்னார்–அதனாலேதானே, எல்லாரும் ஏகமனதா, முயற்சி பண்ணினோம். இல்லேன்னா, செஞ்சிருப்போமா......!", எப்படி, என் யோசனை? வருமுன் காக்கும் பரம்பரையேன்னோ, நாம்! டில்லியில், ஏகக் குளிராம், ஜாக்ரதை, ஜாக்ரதை!"

★

தொடர் சித்திரம்

# கடிகாரம்

9

அண்ணல்

காதகனானான், காதலன்! வெள்ளையனே விரட்டும் கட்சியிலிருந்தபோதும் சரி, இப்போது குடியானவர்களுக்கு சுகம் வாங்கிக் கொடுக்கும் கட்சிக்கு வந்தபோதும் சரி, அவனுடைய அப்பா அனந்தராமய்யர், எப்போதும்போல ஒரே நிலையில்தான் இருந்தார். ஆனால், எங்கள் குடும்பமோ, புயலில் அகப்பட்ட இலவம்பஞ்சாயிற்று! ஊராரிடம் கர்ஜனைக் குரல் காட்டி, 'பெரிய பண்ணை! பெரிய பண்ணை! எனப் பிறர் போற்ற வாழ்ந்த என் அப்பாவுக்கு, குச்சிவீட்டுக்குள் கூப்பிட குரல்கேட்க ஆளம்புகூடஇல்லாமல் வாழ்வதென்றால் எப்படியிருக்கும்? அவர் வெளியிலேயே கிளம்புவதில்லை. அப்பாவை நாடி முன்பு எத்தனையோ பேர் வருவார்கள் என்று சொன்னேன்—அவர்களில் ஒருவர் கூட இப்போது வருவதில்லை. வந்தாலும் 'அப்பா ஏதாவது பணம் காசு கேட்பாரோ? எனும் பயத்தில், நாலு வார்த்தைகளைக் கேட்டுவிட்டு, நகர்ந்துவிடுவார்கள். அனந்தராமய்யர் கூட எப்போதாவது வ்ருவார்—ஆனால் அப்போது குழைவோடு பேசுவார்; இப்போதோ...! ஊம், எங்கள் தலையெழுத்து அப்படி — அவருக்கென்ன, போனமாதம் கூட புதிதாக ஒரு வேலி நிலம் வாங்கினாராம். பிள்ளை ஜெயமணியின் அரசியல் கொள்கைகள் எதுவும் அவருடைய வீட்டில் புயலையும் உண்டாக்கவில்லை—பூகம்பத்தையும் கிளப்பவில்லை. அவர் சுகமாகத்தான் வாழ்ந்தார். கெட்டது, நாங்கள்தான். அதனால், அப்பாவின் உடல் நாளுக்குநாள் துரும்பு போலாயிற்று. நான் வேறு அவருக்குச் சுமையாகத்தென்பட்டேன். வயது வந்த பெண்ணாச்சே!! இதனால், எப்பொழுதாவது அந்த ஜெயமணியைச் சந்திக்க நேர்ந்தால், அவனைப் பழிக்குப்பழி வாங்கிவிட்டு, நாமும் செத்துவிடவேண்டும்—என்று எனக்கு ஆத்திரம் ஆத்திரமாய இருந்து.

எதிர்பார்த்தது நடக்காமல் போய்விடவில்லை. ஒருநாள் இரவு, மணி பதினொன்றிருக்கும். ஏதோ, வேலையாய் கொல்லைபபுறம் போவதற்காக வீட்டுக்கதவைத்திறந்தேன். வாசலில், உட்கார்ந்திருந்தான், ஜெயமணி. நிலவொளியில், அவனைக் கண்டேன் — உடலெல்லாம் ஒரே நடுக்கம். எங்கேயோயிருந்து ஓடி வந்தவனைப்போல், மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது, அவனுக்கு. சட்டையெல்லாம் கிழிந்திருந்தது. என்னைக் கண்டதும், ஓடிவந்து, என் கையைப் பிடிக்கவந்தான். எனக்கிருந்த ஆத்திரத்தையெல்லாம் சேர்த்து, வைத்தேன் ஒரு அறை, கன்னத்தில்.

அவன் திகைக்கவில்லை—"நாச்சி அடி; என்னை. நன்றாக அடி. உன் ஆத்திரம் தீருகிற அளவுக்கு அடி. கொன்றுபோட்டாலும் போடு! நான் இனி எதைப்பற்றியும் கவலைப் படவில்லை. சுகமாகயிருந்த குடும்பத்தை, இந்த நிலைக்குக் கொண்டு வந்தவன், நான் தான். என்ன செய்வது? நீ என்ன, எல்லோருமே நான் வேண்டுமென்று செய்ததாகத்தான் எண்ணுவார்கள். நான் அப்படிப்பட்டவனா, நாச்சி! அதுவும் உன் விஷயத்தில் அப்படிச் செய்வேனா, நாச்சி! உன் அப்பா, என் படிப்புக்கு எவ்வளவு உதவி செய்திருக்கிறார்? — அவருக்குத் துரோகம் செய்யக்கூடிய அளவுக்குத் துணிவு கொள்வேனா, நாச்சி. நான் செய்யவில்லை, அந்தக் காரியங்களை. அதிகக் கூலி கேட்கவேண்டும்—என்று, நான் சொன்னதெல்லாம், உண்மை. நான் சார்ந்திருக்கிற கட்சியின் கொள்கை, அது. அதனைத் தவறுதலாகப் புரிந்துகொண்டு, உன் அப்பாமீது எரிச்சல் கொண்டுவிட்டார்கள். இவ்வளவு சீர்கேட்டையும் உண்டாக்கிவிட்டார்கள். பாவிப்பயல்கள்; அவர்களை நம்பி, நானும் தலைவனானேனே — என்னைச் சொல்லவேண்டும்; கொஞ்சங்கூடப் படிப்பு வாசனை அறியாத பாமரர்கள்; முரட்டுத்தனம் இருக்கிற அளவுக்கு விவேகம் இல்லாதவர்கள்; அவர்களால், உன் குடும்பம் சீரழிந்தது மட்டுமல்ல! என் குடும்பமும் சீரழியப்போகிறது. எனக்கே, அழிவு வந்துவிட்டது," என்று, அழாத குறையாய்ச்சொன்னான் என்னிடம்.

ஜெயமணி செய்த குற்றமல்லவாம், விவசாயிகள் என் அப்பாவைத் தாக்கியது! இவன் கூறிய விஷயத்தைத் தவறுதலாகப் புரிந்துகொண்டார்களாம். அவர்களை ஏசுகிறான், இவன்...... உண்மையில், அவர்கள் அப்படிப்பட்டவர்களா?........ அப்பாவுக்கு வேலை போய், எங்கள் குடும்பம் நடுத்தெருவுக்கு வந்தபிறகு, யாரார் என் அப்பாவை எதிர்த்து அன்று சங்கநாதம் செய்தார்களோ, அந்த காத்தான், கூத்தன், குப்பன், எல்லாம் அடிக்கடி வருவார்கள்—ஆத்திரத்தால், நாங்கள் செய்த காரியம் உங்கள் குடும்பத்துக்கே உலையாய் வந்துவிட்டதே சாமி.....! என்றெல்லாம் வருத்தப்படுவார்கள். சேரியில் போட்ட காய்கறிகளைக்கூடக் கொண்டு வந்து தந்தார்கள்!

அவர்களை, ஜெயமணி, இப்போது திட்டுகிறான்......எனக்கு எதுவும் புரியவில்லை! அவனைப் பார்த்தாலோ, பரிதாபமாயிருக்கிறது. அழுகிறான்...... ஆபத்தில் சிக்கிக் கொண்டேன் என்கிறான்.....செய்த தவறுதல்களையெல்லாம் மன்னித்துக்கொண்டு என்னைக் காப்பாற்ற வேண்டும் என்கிறான்........!

அப்படிப்பட்ட நிலையில், நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்? அதைத்தான் நானும் செய்தேன்! "என்ன வேண்டும், உனக்கு?", என்றேன். அவன் விஷயத்தைச் சொன்னான் ......சிங்கார மடத்துக்குச் சொந்தமான நிலத்தில், அன்றையதினம் 'ஸ்டிரைக்காம்'. அதனால், ஆத்திரப்பட்ட ஜகத்குரு, சர்க்காருக்குத் தெரிவித்தாராம்—சர்க்காரில் அவருடைய சிஷ்யர்கள் சிலர், மந்திரிகளாம் — அதனால், அவர்கள் போலீஸ்படையை அனுப்பி வைத்து, வெளியூர்களிலிருந்தெல்லாம் வேலையாட்களைக் கொண்டு

வந்து நிலத்தை அறுவடை செய்தார்களாம்—அதைக் கண்டு ஆத்திரப்பட்ட விவசாயிகள், கோபங்கொண்டு, அவர்களைத் தாக்க ஆரம்பித்தனராம்!

ஒரு பக்கத்தில் வயலில் அடிதடி—இன்னொரு பக்கத்தில், வேறு சில விவசாயிகள், மடத்துக்குள் புகுந்து கையில் கிடைத்ததையெல்லாம் கொள்ளையடிக்க ஆரம்பித்தனராம்—போலீஸ் வந்து, துப்பாக்கியால் சுட்டதாம்; பலர் செத்துப்போய்விட்டார்களாம் — ஏராளமான விவசாயிகளைப் போலீசார் கைது செய்துவிட்டார்களாம்! இவன்தான் விவசாயிகள் 'லீடர்' என்பதால், போலீசார், இப்போது இவனைத் தேடிக்கொண்டிருக்கிருர்களாம் — எங்கள் வீட்டுக்கும் இவன் எதிரி என்பதால், இங்கே மறைந்திருந்தால், போலீசார் சந்தேகப்பட மாட்டார்களாம்—அதனுல், இடம் கொடு, என்று கேட்கிருன். இடம் கொடுத்திருக்கிறேன்—இவனுக்கு, என் இதயத்தில். அவன், ஒண்ட இடம் கேட்கிருன், என்னே! அவன் சொன்ன வார்த்தைகளையெல்லாம், நம்பினேன்—'சரி' என்றேன்—கொல்லையிலிருந்த மாட்டுக் கொட்டிலில், அவனைத் தங்கியிருக்கச் சொன்னேன்.

மறுநாள் காலை, ஊர்முழுதும், அமர்க்களப்பட்டது! ஜெயமணி, சொல்லியது உண்மை என்று பட்டது!! ஏராளமான குடியானவர்களைப் போலீசார், பிடித்துக் கொண்டு போனுர்கள். ஜெயமணியையும் ஒரு வீடுவிடாமல் தேடினுர்கள்! இதில், ஆச்சரியம் என்ன தெரியுமோ? ஜெயமணியின் அப்பா அனந்தராமய்யரே, போலீசாருடன் சேர்ந்து கொண்டு, "என் மகனு, அவன்! மகாபாவி! ஏதோ, தேச சேவையில் ஈடுபட்டிருக்கிருனே—என்று நினைத்தால், இப்படியெல்லாமா செய்யச் சொல்லுது. அவன் இனி எனக்கு மகன் இல்லை சார்! பிடித்து, தூக்கிலே வேண்டுமானுலும் கொண்டு போடுங்கள்" என்று சொல்லிய வண்ணம், ஒவ்வொரு வீடாகத் தேடினுர்.

எங்கே என் வீட்டுக்கு வந்து தேடுவார்களோ, என்று எனக்குச் சற்றுப் பயந்தான் ஜெயமணி கூறியதுபோல, அவர்கள் வரவில்லை. போலீசார் போய்ப் பார்க்கலாம் என்று சொன்னபோது, அனந்தராமய்யரே — "அவர் வீட்டையும் கெடுத்தவன் சார், இவன்; அங்கே போனு, அவரே நமக்குப் பிடித்துக் கொண்டுவந்து ஒப்புவித்திருப்பார் ......" என்று சொன்னுராம், உண்மையென்று அந்த அதிகாரிகளும் எங்கள் வீட்டுக்கு வராமல் போய்விட்டார்கள்.

எனக்குக் கொஞ்சம் நிம்மதியாயிற்று, மனம். ஏனெனில், அவன், வீட்டுக் கொட்டிலில், என்னுல் மறைக்கவைக்கப்பட்டிருக்கும் விஷயம், அப்பாவுக்குக்கூடத் தெரியாதே......! ஜெயமணியிடம் 'இனி இங்கே தங்காதே—எப்படியாவது போய்விடு' என்று சொன்னேன்,

அன்றிரவு! படுக்கையில் படுத்த எனக்குத் தூக்கமே வரவில்லை. கொட்டிலில் ஜெயமணி; வீட்டுக்குள் நான்......என்ன இருந்தாலும் பெண்தானே......எழுந்து, கதவை மெதுவாகத் திறந்துகொண்டே வந்தேன். கொட்டிலில், ஜெயமணியுடன் யாரோ பேசும் சப்தம் கேட்டது! இந்த நேரத்தில், யார் ஜெயமணியுடன் பேசுவார்கள்—மறைந்து கொண்டு கேட்க முயற்சித்தேன். நிலவு எழும்பவில்லையாதலால், யார் பேசுவது என்பதும் சரியாகத் தெரியவில்லை, எனக்கு...அருகில் சென்று பார்ப்போம் என்று அடியெடுத்து வைத்துச் சென்றேன். அங்கே நான் கண்ட காட்சி! அனந்தராமய்யர், ஜெயமணியுடன் பேசிக்கொண்டிருந்தார், "டேய் ஜெயா! விஷயத்தை உன் மாமாவுக்கு விபரமா எழுதியிருக்கேன். அவருக்கு, இப்போ, கட்சியிலே நல்ல செல்வாக்கு. அதனுலே சொன்னபடி நடக்கும். எல்லாம் அவரு பார்த்துக்கொள்வார். நீ மட்டும் பத்திரமாப் போய்ச் சேரு ......"

"சரி, அப்பா!"

அவர்கள் பேச்சு முடிந்தது. அனந்தராமய்யர், விடைபெற்றுக் கொண்டு போகும்போது, ஜெயமணி வைக்கோல் போரிலிருந்து ஏதோ, ஒரு மூட்டையை எடுத்துக் கொடுத்தான்! என்ன மூட்டை, அது......?—என்று யோசித்தேன், நான். அதற்குள், "டேய்! ஜெயா, முதலிலே, நீ இந்த இடத்தை விட்டுக் கிளம்பு. பிறகு நான், போறேன் ......" என்றுர். அப்படியே, அவனும் செய்தான். என்னிடம் ஒரு வார்த்தைக் கூடச் சொல்லிக் கொள்ளாமல், புறப்பட்டு விட்டான் ஜெயமணி!! என்ன, நன்றிகெட்ட ஜென்மம்.

அவன் போன சிறிது நேரத்துக்கெல்லாம், அனந்தராமய்யரும், கிளம்பினர். அவர்புறப்பட்டபோது' ஜெயமணி அவரிடம் கொடுத்தானே—ஒரு மூட்டை......அதிலிருந்து ஏதோ ஒன்று, கீழே விழுந்தது! என்ன, அது......?—அவர் போன பிறகு, அந்த இடத்தில் போய் தேடிப்பார்த்தேன்......இப்போது எடுத்துப் பார்த்துவிட்டு வைத்தேனே, இந்தக் கடிகாரம் அகப்பட்டது! அதுதான், இந்தக் கடிகாரம்!!—இதுதான், எனக்கு கடிகாரம் கிடைத்ததற்கான கதை. என்னை, என்ன வேண்டுமானுலும் செய்து கொள்ளுங்கள். உண்மை இதுதான்!", என்று முடித்தாள், நாச்சி. எனக்கு, அவள்மீதிருந்த கோபம் எல்லாம் போய்க்கொண்டிருந்தது!

"ஏன்! நாச்சி. அந்த ஜெயமணி மீது, ஆசை வைத்திருந்ததாகச் சொன்னியே—ஒரு தடவையாவது, நீங்க இரண்டுபேரும்.....தனியா..." என்று, இழுத்தாற்போலக் கேட்டேன்.

எனக்குச் சந்தேகம் — நாச்சி, முன்பே சுவைக்கப்பட்ட கனிதானு, என்று.

அவள் சொன்னுள், "இந்த ஆண்களைப் போன்றவர்களல்ல, பெண்கள். கொஞ்சம், ஜாக்கிரதையா இருக்கத் தெரியும். நான் ஒன்றும், அவ்வளவு அவசரக்காரியல்ல......!". புயல், ஓய்ந்தது. அவளைக் குத்த எடுத்த கத்தியை வீசி எறிந்தேன். நாச்சியின் கண்ணீரைத் துடைத்துவிட்டு, அன்போடு அணைத்துக்கொண்டேன்.

"பிறகு, அந்த ஜெயமணி என்ன ஆனுன், நாச்சி?"

"என்ன ஆனுனு! அதுதான் பெரிய கதை......" என்றுள்.

"என்ன போலீசில் அகப்பட்டுக் கொண்டானு?"

"அகப்பட்டுக்கொண்டானு?...... ஊம்......அகப்பட்டுக்கொண்டு ஜெயிலுக்குப் போனவர்கள், விவசாயிகள்தான்; அவனல்ல. அவனுடைய காலில், பெரிய பெரிய போலீஸ் அதிகாரிகளும், ஜட்ஜுகளும், மந்திரிகளும்கூட, இன்றைய தினம் விழுந்து கும்பிடுகிருர்கள்...'

"என்ன?" என்று ஆச்சரியத்தோடு கேட்டேன், நான்! என் ஆச்சரியத்தைப் பெருக்கக்கூடிய விதத்திலே இருந்தது, அவள் சொன்ன விபரம்.

[வளரும்]

# அரசியற் கருத்துக்கள்

[ அன்று முதல் இன்று வரை ]

[பேராசிரியர் இருதயராஜ்]

### அரிஸ்டாட்டிலுக்குப் பின்

பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் பெரும்பாலும் மாறுபட்ட கருத்துகளையே கொண்டிருந்தனர். ஆனால் "கிரேக்க நகர ராஜ்யமே சிறந்த அரசியலமைப்பு, அந்த அமைப்பில் தங்கள் காலத்தில் சில குறைபாடுகள் இருந்தன, அக் குறைகளைப் போக்கி நகர ராஜ்யங்கள் அழிந்து போகாமல் காப்பாற்றுவதற்கு கிரேக்கருக்கு அறத்தையும், அறிவு வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்ட கல்வி கற்பிப்பது அவசியம்" என்ற முடிவில் மட்டும் இருவரும் ஒத்திருந்தனர்.

கல்வியின் மூலம் கிரேக்க நகர ராஜ்யங்களை நசித்துவிடாமல் காப்பாற்றிவிடலாம் என்ற அவர்கள் நினைப்பு வெறுங் கனவு என்பதை காலத்தின் போக்கு வெகு விரைவில் விளக்கிவிட்டது. நகர ராஜ்யங்கள் அழிவுப் பாதையில் வெகு வேகமாக சென்றுகொண்டிருந்தன. அவைகளின் முடிவு நாள்—கிரேக்க நாகரிகத்தின் அஸ்தமன காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. உலக சாம்ராஜயம் உதயமாகப் போகும் நாள் சமீபித்துக்கொண்டிருந்தது. இந்த நிலை ஏற்படும், அதுவும் தங்கள் காலத்துக்குப் பின் சீக்கிரத்திலேயே ஏற்படும் என்று பிளேட்டோவோ அரிஸ்டாட்டிலோ எதிர்பார்க்கவேயில்லை.

இந்த நிலை ஏற்பட்டதற்குக் காரணம்—அதிசயமாயிருக்கும்—ஆனால் உண்மையில் அரிஸ்டாட்டிலே தான். இந்த நிலையை ஏற்படுத்தியவர் அந்த அறிஞரின் மாணவர்களில் ஒருவரான பிலிப் என்ற அரசன்தான். கிரேக்க நகர ராஜ்யங்களை நிர்மூலமாக்கிவிட்டு உலகிலேயே முதன் முதலாக ஒரு மாபெரும் சாம்ராஜயத்தை நிறுவுவதற்குத் திட்டமிட்டான் பிலிப்.

அரிஸ்டாட்டிலின் காலத்துக்குப் பின் கிரேக்க நகர ராஜ்யங்களில் ஜனநாயகம் என்ற பெயரில் பாமரர் ஆட்சி ஏற்பட்டது. லஞ்சம் ஊழல்கள் மலிந்தன. சமுதாயத்தில் செல்லரிக்கத் துவங்கிவிட்டது என்பதற்குப் பல அறிகுறிகள் தோன்றின. சிறிய ராஜ்யங்களைப் பெரிய ராஜ்யங்கள் கொடுமைப் படுத்தின. ஆதென்ஸ், ஸ்பார்ட்டா, தீப்ஸ் என்ற மூன்று பெரிய நகர ராஜ்யங்களும் முறையே தங்களுடைய ஆதிக்கத்தை ஒன்றின்பின் ஒன்றாக நிலைநாட்டி சிறிய ராஜ்யங்களைத் தங்கள் காலடியில் அழுத்திக்கொண்டிருந்தன. காலக்கிரமத்தில் இம் மூன்று பேரரசுகளுமே தங்களுக்குள் ஆதிக்க வெறியாலும் பொறாமையாலும் போட்டியிட்டுக்கொண்டு போரிலிறங்கி ஒருவரை ஒருவர் அழித்துக்கொண்டனர். கடைசியாக மாஸிடோனியாவில் பிலிப் என்ற பேரரசன்—அரிஸ்டாட்டிலின் மாணவன்—தோன்றினான். கிரீஸில் ஒற்றுமை குலைந்திருப்பதைக் கண்டான். அதைத் தனக்கு சாதகமாக்கிக்கொண்டு தன்னுடைய ஆதிக்கத்தை கிரீஸில் சுலபமாக நிலைநாட்டினான். சரித்திரத்திலேயே முதல் தடவையாக கிரீஸிலிருந்த அத்தனை நகர ராஜ்யங்களும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டன.

கிரேக்க நகர ராஜ்யங்களின் அமைப்பிலேயே இருந்த சில குறைகள் அவைகள் அதிகநாள் நீடித்திருக்க முடியாது என்பதைத் தெளிவாகக் காட்டின. அமைப்பில் அவை மிகச் சிறியவை. அவைகளுக்குள் என்றுமே ஒற்றுமையிருந்ததில்லை. பொறாமையும் பிணக்குமே அங்கு குடிகொண்டிருந்தன. கிரீஸில் பிறந்த ஒவ்வொருவனும் தன் பிறந்த நகரத்தைத் தான் பெரிதாகக் கருதினானே தவிர, அதற்குத்தான் தன் அன்பையும் அபிமானத்தையும் ஆதரவையும் அளித்தானே அல்லாது, தான் ஒரு அதீனியன், ஸ்பார்ட்டன், தீபன், கொரிந்தியன் என்று சொல்லிக்கொள்ளுவதிலே பெருமைப் பட்டுக்கொண்டிருந்தானே தவிர, மொத்தத்தில் தான் பிறந்த நாட்டுக்கு — கிரீஸிக்குப் — பெருமையும் பேராதரவும் தேடித் தருவதில் எவனும் கவலை செலுத்தவில்லை.

அத்துடன் அந்நகர ராஜ்யங்களில் அடிமைவாழ்வை அனுமதித்திருந்தது ஒரு காலத்தில் அபாயத்தை விளைவிக்கும் என்பதை விஷயமறிந்தவர்கள் மட்டும் உணர்ந்திருந்தனர்.

இவ்வளவு குறைகளையும் ஒருங்கே கொண்டிருந்த ஒரு அரசியல் அமைப்பு கிரீஸில் நாலாவது நூற்றுண்டுவரை நிலைத்திருந்ததே ஒரு அதிசயந்தான். பாரஸீகர்கள் இரு முறை கிரீஸின்மீது படையெடுத்தபோதெல்லாம், எங்கே தங்கள் சுதந்தரம் பறிபோய் விடுமோ, கிரேக்கர்களால் அநாகரீகமுள்ள காட்டுமிராண்டிகளென கருதப்பட்ட பாரஸீகர்களுக்கு அடிமையாகி விடுவோமோ, எங்கே தங்கள் நாகரீகம் நாசமாகிவிடுமோ என்ற பயத்தில் சிலகாலம் ஒற்றுமை நிலவியிருந்தது, கிரீஸில்.

பாரஸீகர் போரில் புறமுதுகு காட்டி ஓடியபின், இனி பாரஸீகர் கிரேக்க மண்ணில் திரும்பவும் கால் வைக்கவே பயப்படுவார்கள் என்ற நிலை ஏற்பட்டபின், வெளியிலிருந்து தொல்லைதரக் கூடியவர் யாரும் இல்லை என்று நிச்சயமானபின், கிரீஸில் மறுபடியும் அவரவர் சொந்த நகரத்தின் பெருமையும், அதன் விளைவாக அடிக்கடி அவர்களுக்குள் மோதலும், கொந்தளிப்பும் ஏற்பட்டது. இது பிலிப்பின் ஆதிக்க வெறிக்கு ஆக்கம் அளித்தது.

### 'சாம்ராஜ்யம்'

கிரீஸை முதன் முதலாக ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்த பெருமை மாஸிடோனியப் பேரரசன் பிலிப்பைச் சாரும். அவனுக்குப்பின் அவன் மகன் பிலிப் பதின்மூன்று ஆண்டுகளில் (கி. மு. 336—323) கிரீஸிலிருந்து கங்கைக்கரை வரையில் பரந்த ஒரு உலக சாம்ராஜ்யத்தையே தன் சாமர்த்தியத்தால் சமைத்து விட்டான். கிரேக்க நகர ராஜ்யங்கள் தங்கள் சுதந்தரத்தை ஒரு நொடியில் இழந்துவிட்டன. ஒரு பெரிய சாம்ராஜ்யத்தில் அவை•

கள் கேவலம்—சிறு நகராட்சிகளாக (Municipalities) மாறிவிட்டன.

கிரேக்க நாகரீகம் இது முதற் கொண்டு வெளிநாடுகளுக்கெல்லாம் பரவத் தொடங்கியது. அலெக்ஸாண்டர் அடியெடுத்து வைத்த இடமெல்லாம், அங்கு கவ்விக்கொண்டிருந்த அநாகரீக இருள், பறந்தோடியது. கிரேக்க நாகரிகமும் கலாச்சாரமும் அங்கெல்லாம் புகுந்தது.

பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் நகர ராஜ்யங்களையே பார்த்திருந்தனர். அவைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியலைப் பற்றியே அவர்கள் பேசினர்கள், எழுதினர்கள். நகர ராஜ்யங்கள் மறைந்த பின், கிரேக்க அறிஞர்கள் அவைகளை ஆதாரமாக வைத்து அதுவரையில் ஆராய்ந்து தொகுத்து வைத்திருந்த அரசியற் கருத்துக்களெல்லாம் இப்போழுது உதவாமற் போயின.

எனவே, புதிய மாற்றங்களுக்கேற்ப, புதிய கருத்துக்கள் தேவையாயின. எபிகூரியன்கள், ஸ்டோயிக்குகள் என்ற அரசியல் அறிஞர்கள் தோன்றி, திருந்திய நிலைமைக்கேற்ப, மாறின அமைப்புகளை மனதிற்கொண்டு புதிய கருத்துக்களை வெளியிட்டனர்.

ஆனல் அதற்குள் அலெக்ஸாண்டர் நிறுவிய சாம்ராஜ்யம் அவனுடைய அகால மறைவினல் சரியத் தொடங்கிவிட்டது. முடிவில் மாஸிடோனியா, கிரீஸ், எகிப்து முதலிய நாடுகளெல்லாம் ரோமானியர் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆனல் மாஸிடோனியாவின் ஆதிக்கம் மாறி, ரோமானியரின் ஆட்சி ஏற்பட்டதால் பெரிய மாற்றம் ஒன்றும் ஏற்படவில்லை. காரணம், ரோமானியரும் கிரேக்கர்களைப்போல்தான் காணப்பட்டனர். ரோமானியரின் சமூக அமைப்புகள், சட்ட நிறுவனம், அரசியல் கருத்துக்கள், கலாச்சாரம் முதலியவை எல்லாம் ஏறக்குறைய கிரேக்கருடையவைகளையே ஒத்திருந்தன. தாங்கள் கிரேக்கரின் வழி வந்தவர்கள், அவர்களின் வாரிசுகள்தான் என்று சொல்லிக் கொள்ளுவதில் பெருமை கொண்டிருந்தனர் ரோமானியர்.

**சுயநலம்**

எபிக்யூரஸ் என்ற கிரேக்க அறிஞர் கி. மு. 340–270 ஆண்டுகளில் தமது கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தார். ஒவ்வொருவரும் தன்னுடைய சொந்த நலனையே கவனிக்க வேண்டும். சொந்த சுகமே வாழ்க்கையின் குறிக்கோள். நாட்டின் அரசு இந்த சுகத்தை சுலபமாக அடைவதற்காக அமைக்கப்பட்ட ஒரு கருவி போன்ற ஸ்தாபனம். அரசு என்பது இயற்கையில் தானுகவே ஏற்பட்டதல்ல. மக்கள், கூட்டாகச் சேர்ந்து தங்கள் சுகத்துக்காக ஒப்பந்தத்தின் பேரிலோ அல்லது சம்பிரதாயத்தின் விளைவாகவோ ஏற்படுத்திக் கொண்ட

# "பஞ்சாபி-சூபா"

★

இந்துமதத்தின் போக்கு பிடிக்காததால், உண்டானவைகளிலே ஒன்று, சீக்கிய மதமாகும்.

"ஆண்டவன் எங்கும் நிறைந்தவர்! ஒருவராய் இருப்பவர்!" எனும் கொள்கை கொண்டது.

"காக்க ஒருத்தன், ஆக்க ஒருத்தன், அழிக்க ஒருத்தன், அக்கினிக்கு ஒரு கடவுள், காற்றுக்கு ஒரு தெய்வம்—என்று, ஏராளமான தெய்வங்களைச் சிருஷ்டித்து, வணங்குவது இந்துமதமாகும்.

அதனல், 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்!' எனும் கோட்பாட்டுக்கு, இன்றுமட்டுமல்ல, எப்போதுமே பார்ப்பனீயம் தடைக்கல்லாயிருந்து வந்திருக்கிறது.

அதனுலேயே, புத்தமதம் விரட்டி ஓட்டப்பட்டது—ஜைனமதம் அழிக்கப்பட்டது. இந்தக் காரியத்தை, அந்தக் காலத்தில், பார்ப்பனிய மதத் தலைவர்கள், செய்தனர்.

அந்த மனேபாவம், இன்றும், 'உயர்சாதி'யினரிடம் குறையாதிருக்கும் பண்பை அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறோம்.

இதோ, ஒரு சான்று! இங்கல்ல, வடநாட்டில்!!

பஞ்சாபில் வாழும் சீக்கிய மக்கள் அகாலிதளம் என்றோர் இயக்கம் கண்டு, தங்களுக்கோர் தனி நாடு வேண்டுமென்று முழக்கமிட்டு வருகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற ஸ்தல ஸ்தாபனத் தேர்தலில் அகாலி தளம் பெற்ற பெருமிதமான வெற்றியைக் காட்டி, தங்கள் கோரிக்கைக்கு மக்கள் ஆதரவிருக்கிறது, அதனல் தமக்கோர் தனி நாடு தேவையென முழக்கம் எழுப்புகிறர்கள். அப்படிப் பெறவிருக்கும் நாட்டுக்கு, "பஞ்சாபி சூபா" என்று பெயரிடுவதென முடிவு செய்திருக்கிறர்கள்.

பஞ்சாபி சூபா!—இந்தப் பெயரைக் கேட்டதும், தண்டு தூக்கி, தோள் தட்டக் கிளம்பியிருக்கின்றனராம், 'ஜனசங்கம்' எனும் போர்வையில் மறைந்துள்ள இந்து வெறியர்கள்.

அண்மையில் மாநாடு கூட்டி, சீக்கியர்களை ஒரு கைபார்த்துவிடப் போகிறோம், என எச்சரித்துள்ளனர், லூதியானு என்னுமிடத்தில்.

**வகுப்புவாதிகள் ! குறுகிய மதியினர் !!**—என்று நம்மீது வீசப்படும், அதே குற்றச்சாட்டுகள், அவர்கள்மீதும் வீசப்பட்டிருக்கின்றன, ஜனசங்கத் தலைவர் ஆச்சார்ய ராம்தேவ் என்பவரால்.

தனிநாடு கோரிக்கை !—ஜனசங்கத்தினருக்கு, உண்டாக்குகிறது, எரிச்சலை. சீக்கியர்களா, கேட்பது தனிநாடு! — என்று சீறுகிறர்களாம், இவர்கள்—மதந்தாங்கிகள்.

இங்குள்ள வைதீகர்களும், நமது இனக் குரல் கேட்டு, இதே எரிச்சலைத்தானே கொள்ளுகின்றனர்! ஏசுகின்றனர்!!

பஞ்சாபில், ஜனசங்க எதிர்ப்பு. இங்கே, வைதீகர்கள் எதிர்ப்பு.

அதனல்தான், அண்மையில் ஜனசங்கத்தை உண்டாக்கும் இந்துமகா சபையின் தலைவர்களை அழைத்து, இங்குள்ள மயிலையும் மாம்பலமும், மாலைகள் சூட்டியிருக்கிறது.

மதபோகிகள், தமது சுரண்டலை எதிர்க்கும் ஒலிகள் புறப்பட்டால், ஒன்று கூடி அழிப்பது — அன்று முதல் இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வரும், கதை.

அதனைத்தான், லூதியானு காட்சி நினைவூட்டுகிறது.

★

அமைப்பே அரசு என்பது. அநீதியைத் தடுப்பதற்கு மக்கள் தங்களுக்குள்ளே ஏற்படுத்திக்கொண்டது சட்டம். சட்டத்தால் சுகம் பிறக்கும் என்பதாலேயே மக்கள் சட்டத்தை மதிக்கிறார்கள். அரசாங்க அமைப்பும் சட்டமும் எவ்விதமாயிருந்தாலும் பரவாயில்லை. பலமுள்ளதாயும், மக்களுக்குள்ளே அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டி, மற்றவர் தலையீடின்றி சொந்த சுகத்தை ஒவ்வொருவரும் நிலையாகப் பெறுவதற்கு எந்த அரசாங்கம் வழி செய்கிறதோ அதுவே சிறந்ததாகும். இவைகளே எபிக்யூரஸ் வெளியிட்ட கருத்துக்கள்.

அவரைப் பின்பற்றியவர்கள் பொதுக் காரியங்களில் அதிகம் ஈடுபடாது தங்களுடைய சொந்த நலன்களைக் கவனிப்பதே சரி என்று எண்ணினர். இதில் ஏதும் தவறு இருப்பதாக சொல்லமுடியாது. தன்னலத்தைக் கவனிப்பது, சொந்த காரியங்களில் அதிக சிரத்தைக் காட்டுவது குற்றமல்ல. அது சுயநலமென்றோ அல்லது பொது நலத்துக்கு விரோதமென்றோ சொல்வதற்கில்லை. இருந்தாலும், எபிக்யூரன்ஸ் கொள்கைகள் சமுதாயம் சீரழியக் காரணமாயிருந்தன. இக்கொள்கைகளைப் பின்பற்றியவர்கள் பொது நலனையே புறக்கணித்துவிட்டு நாட்டையே சுயநலக் காடாக மாற்றிவிடுவதற்கு வழி ஏற்பட்டது.

ரோமானியர்கள் இயற்கையிலேயே பொதுநலனைப் பிரதானமாகக் கருதினவர்கள். அதனால் அவர்களிடையே எபிக்யூரஸின் கொள்கைகள் அவ்வளவாக எடுபடவில்லை. ஆதரவும் அதிகமாக இல்லை. ஆனால் ஸ்டோயிக்குகளின் கொள்கைகள் ரோமானியரிடையே அதிவிரைவில் பரவியது. அவர்களுடைய போக்குக்கு அந்தக் கொள்கைகள் மிகவும் பிடித்திருந்தன. ரோமானியரில் தலைசிறந்தவரெனக் கருதப்பட்டவர்கள் இந்தக் கொள்கைகளைப் பின்பற்றினார்கள். இந்தக் கொள்கைகளுக்குக் காரணமாயிருந்தவர் ஜீனோ என்ற கிரேக்கர் (கி. மு. 340—260).

**'கடமையுணர்ச்சி'**

ஜீனோவின் கருத்துப்படி சொந்த சுகமல்ல முக்கியம். கடமையுணர்ச்சியே கண்டிப்பாக ஒவ்வொருவருடைய மனதிலும் முதலிடம் கொண்டிருக்கவேண்டும். மனச் சமாதானமும் மனதிருப்தியுமே ஒவ்வொருவருடைய குறிக்கோளாகவும் இருக்கவேண்டும். தன்னுடைய தேவைகள் எத்தனை இருக்கின்றனவோ அத்தனையையும் பூர்த்தி செய்யக்கூடிய சக்தியுண்டோ அதற்குள்ளாகவே தன்னுடைய தேவைகளைக் குறைத்துக்கொள்வதாலேயே மனச்சாந்தியை அடையலாம். இதை ஒருவன் நடைமுறையில் நம்பிக் கடைபிடித்தால் அவன் அரசனாயினும் அல்லது ஆண்டியேயாயினும் அல்லது அடிமையேயானாலும் எல்லாம் ஒன்றுதான். தன்னால் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய சக்திக்கேற்ப ஒவ்வொருவனும் தனது தேவைகளைக் குறைத்துக்கொண்டால் மனதிருப்திப் பெறலாம்.

இந்த அடிப்படையிலிருந்து ஆரம்பித்து, மனித குலத்தையே ஒரு அமைப்பாகக் கொள்ளவேண்டும் என்ற கருத்தை போதித்தார் ஜீனோ. மனிதனை ஒரு குறிப்பிட்ட நகரவாசி என்றோ, ஒரு தனிப்பட்ட ராஜ்யத்தின் பிரஜை என்றோ கருதாமல் மனித சமுதாயத்தில் ஒரு உறுப்பினன் என்று கொள்ள வேண்டும் என்றார். எல்லா மனிதர்களையுங்கொண்ட ஒரு அமைப்பு இருந்தால்தான் அது இயற்கையானதாக இருக்கும். அதைவிட்டு இனத்துக்குத் தக்கபடி, நிறத்துக்குத் தக்கபடி, அல்லது இடத்துக்குத்தக்க தனித்தனி ராஜ்யங்கள் ஏற்படுத்துவது செயற்கையான அமைப்பாகவே இருக்கும். இயற்கைச் சட்டம் என்று ஒன்று உண்டு. அது எக்காலத்திலும், எல்லோருக்கும் பொதுவானது. மனிதனால் ஏற்படுத்தப்பட்ட எல்லா சட்டத்துக்கும் அது மேலானது. அது மாறவே மாறாது. யாராலும் மாற்றவும் முடியாது.

"இந்த இயற்கைச் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து, சொந்த மனச்சாட்சிக்கு விரோதமின்றி கடமைகளைச் சரிவரச்செய்து வருவதே மதம் என்பது. கடவுள் உண்டா இல்லையா என்ற கேள்விக்கு இடமில்லை. கடவுள் இல்லையானால், அவர் இல்லாமலே மனிதன் தன் காரியங்களைப் பார்த்துக்கொள்ள முடியும். கடவுள் ஒருவர் இருந்தால் அவர் அனுப்பும் நன்மைகளைப் பெற்றுக்கொண்டு திருப்தியும், அவர் நன்மைகளைச் செய்யவில்லையென்றால் அதற்காக அதிருப்தி அடையாமலும் இருக்கவேண்டும்." என்றார் ஜீனோ.

இயற்கையோடு ஒன்றித்து வாழ்வதிலேதான் இன்பம் காணமுடியும், சுகம் பிறக்கமுடியும். இயற்கையோடியைந்து வாழ்வது பகுத்தறிவோடு வாழ்வதாகும். மனித வர்க்கத்தின் எண்ணமும் நோக்கமும் பகுத்தறிவைப் பிரயோகித்து இன்பமும் அறமும் நிறைந்த வாழ்வை அடைவதுதான்.

பகுத்தறிவு என்று ஜீனோ குறிப்பிடும்பொழுது, ஒவ்வொருவனும் தனக்குத் தோன்றியதுதான் சரி என்று சொல்லுவது தவறு என்றும், பகுத்தறிவு என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மனப்பான்மையே என்றும், சட்டங்கள் பகுத்தறிவின் அடிப்படையில் ஏற்பட்டவையே என்றும், மனிதர்களை மிருகங்களினின்றும் வேறுபடுத்துவது இந்தப் பகுத்தறிவுதானாகையால், எல்லா மனிதரும் பொதுவான இயற்கைச் சட்டங்களுக்கு அடங்கினவர்கள், எனவே, சட்டத்துக்குமுன்னே எல்லோரும் சமானமானவர்கள் என்றும் கூறுகிறார்.

மனிதகுலத்தை ஒரு அமைப்பாகக்கொண்டு பார்க்கும்போது, மனிதர், அறிவற்றவராகவும் கேடு நிறைந்த கடையழிந்தவராகவும் காணப்படுகின்றனர். அவ்வப்பொழுது தோன்றி மறையும் இன்பங்களை நாடி அலைகின்றனரே தவிர, நிலையான இன்பத்தைப் பற்றி அநேகமாக மனிதர் கவலைப்படுவதாகத் தோன்றவில்லை. மக்கள் மனிதத்தன்மையை மறந்து

## வேறு வழியில்லை!

**"சீர்திருந்த வாதிகளால் செய்யப்படும் எந்தவிதமான நல்ல செயல்களையும் வைதிக உலகினர் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக, அச்செயல்களுக்கு "நாத்திகம்" என்று பெயர் சூட்டிவிடுகிறார்கள். அதோடு அவர்கள் நின்றுவிடுவதில்லை. நாத்திகப் பிரசாரம் ஆத்திகம் வளர்வதற்கு உதவி செய்கிறதென்று வேறு ஜம்பம் அடித்துக் கொள்கிறார்கள். சீர்திருத்தவாதிகளின் நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மனமில்லாதவர்கள் இவ்விதம் பேசுகிறார்கள்—வேறு வழியில்லை"**

விடுவதனுலேதான், அரசாங்கம், சட்டம் என்பவைகள் தேவையும் அவசியமுமாகின்றன. மனிதர் தங்களுக்குரிய பண்புடன் நடந்தால் சட்டம் எதற்கு? அவர்களை அடக்கி ஒடுக்க அரசாங்கம் ஏன்?

சட்டமும் அரசாங்கமும் மனிதரைக் கட்டுப்படுத்தி, அவர்கள் விருப்பப்படி சுயேச்சையாக வாழ விடுவதில்லையாதலால், அவை தீமையாகத் தோன்றினுலும், மனிதரை அவர்களுக்குரிய பண்புகளுடன் வாழவும், தன்மையிலிருந்து வழுவாமல் காப்பாற்றுவதற்கும் அவை தேவைப்படுகின்றன. எனவே, அரசு அல்லது ராஜ்யம் என்பது, ஒரு தவிர்க்கமுடியாத தேவையுள்ளதீங்கு என்று வேண்டுமானுல் கூறலாம். இவைகளே ஸ்டோயிக்குகளின் கொள்கைகள்.

பகுத்தறிவையும் இயற்கைச் சட்டங்களையும் இணைத்து, சட்டத்துக்கு முன்னே எல்லோரும் சமமானவர்கள் என்ற கருத்தை முதன்முதலாக அரசியலில் புகுத்தினவர்கள் ஸ்டோயிக்குகள்தான்.

பிளேடோ, அரிஸ்டாட்டில் இவர்களுடைய கருத்துக்கள் பழமையாகக் கருதப்பட்டு, எபிக்யூரஸ், ஜீனே இவர்களுடைய கருத்துக்களே, பழைய காலத்துக்கும் நிலைமைக்கும் சரியானதென்று எடுத்துக்கொள்ளப்பட்டது, ரோமானியர்களால். அதிலும், முக்கியமாக ஸ்டோயிக் கொள்கைகள்தான் ரோமில் பிரபல பிரபுக்களாலும், ஏன் சக்கரவர்த்திகளாலுமே அதிகமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. மொத்தத்தில், கிரேக்க நகர ராஜ்யங்கள் அழிந்தபின், ரோமானியர்களால் அமைக்கப்பட்ட உலக சாம்ராஜ்யத்துக்கேற்றதாக எபிக்யூரியன், ஸ்டோயிக் கொள்கைகளே வற்புறுத்தப்பட்டன. கிருஸ்துவின் தோற்றகாலவரையில் அரசியல் வானில் முக்கியத்துவம் பெற்று உலவிய கருத்து, ஸ்டோயிக்குகளுடையதுதான். கிருஸ்துவின் தோற்றம்தான் அடுத்தபடியாக உலகில் புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கியது.

(தொடரும்)

# கைத்தறியாளர் ஆதரவு வாரம்

கைத்தறியாளரின் கண்ணீர் ஆட்சியாளரால் இன்னமும் துடைக்கப் படவில்லை. எனவே, அவர்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்கள் வாழ்வதற்கான சிறிதளவு வசதியையாவது செய்துகொடுக்கவேண்டியது, பொது மக்களுடையதும், பொதுமக்களைச் சார்ந்து நிற்கும் இயக்கங்களுடையதும் ஆன கடமையாக இருக்கிறது. அதனை நன்கு உணர்ந்ததால், திராவிட முன்னேற்றக் கழகம், தன்னுல் இயன்ற அளவு பணியினை வெற்றிகரமாகச் சென்ற ஆண்டுகளில் செய்து காட்டியிருக்கிறது. இவ்வாண்டும் ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகள், கடமையைச் செவ்வனே செய்துகாட்ட வேண்டுமென்று கிளைக் கழகங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுதுள்ள நிலையில், கைத்தறியாளர்களின் துயரைப் போக்கக் கூடிய வகையில் செய்யக்கூடிய பணி, கைத்தறித் துணிகளை ஏராளமான அளவில் எல்லா வழிகளிலும் வாங்கும்படி பொதுமக்களைத் தூண்டவேண்டியதாகும்; அதற்கான அரிய வாய்ப்பு, வருகின்ற பொங்கற் புது நாளாகும்.

பொங்கற் புதுநாளில் பொதுமக்கள் உடுத்தும் புத்தாடைகள் கைத்தறித் துணிகளாக இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்தியும், கைத்தறிப் பொருட்காட்சிகளை ஏற்பாடு செய்து கைத்தறித் துணிகளை வாங்கும்படி பொதுமக்களைத் தூண்டியும், கைத்தறித் துணிகளை தனிப்பட்ட முறையில் சென்றே, அல்லது ஊர்வலமாகப் போயோ விற்பனை செய்தும், கைத்தறித் துணி செலவழிவதற்கான கடமைகளைப் பொதுவாகப் பொதுமக்கள் - குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் புரிவார்களாக.

**மேற்குறித்த கடமைகளைச் செய்வதற்கான முறையில், ஜனவரித் திங்கள் 7-ம் நாளிலிருந்து 13-ம் நாள் வரையிலுள்ள ஒரு வார காலத்தைக் கைத்தறியாளர் ஆதரவு வாரமாகக் கொண்டாடும்படி, பொதுமக்களையும், திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளையும் வேண்டிக்கொள்கிறேன்.**

கைத்தறியாளர் உள்ளங்களிலே மகிழ்ச்சி பொங்க, அவர்கள் இல்லங்களிலே பொங்கல் பொங்கட்டும்!

**சி. என். அண்ணுதுரை,**
பொதுச் செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.